ஆரம்பக் கல்வி

8

ஜனவரி, 1934.

JL
T15ம211,N33
N34.1.8
190333

1225

# ஆரம்பக்கல்வி

## ELEMENTARY EDUCATION

பொருளடக்கம்

OFFICE OF THE REG...
10 JUN 1935
MADRAS

கடவுள் வணக்கம் 287
ஆரம்பக் கல்வி 288
பிரஸிடெண்டுகளுக்கு விண்ணப்பம் 298
வளர்ந்தவரின் படிப்பு 300
கல்வி யபிவிருத்தி 302
உதய குமாரன் 303
திண்ணைப் பள்ளிகள் 307
சென்னை ராஜதானியில் கல்வி 309
ஆரோக்கியம் 310
தஞ்சை மகாநாடு 311
ஆசிரியர்கிணற்றுதவளைகளா? 319
கேள்விகளும் பதில்கள் 322
யார் ஆசிரியர்? 323
போட்டி பந்தயங்கள் 326
சங்கக் குறிப்புகள் 327
மதிப்புரைகள் 329

7L
T15-211,N33
N34.1.8
190333





உள்நாடு விலை அணா 1½ மலர் 8. வெளி நாடு விலை அணா 3

# "ஆரம்பக் கல்வி"

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற் கூலி உள்பட | | |
| இந்தியா, பர்மா, சிலோன், | | 1 0 0 |
| வெளி நாடுகளுக்கு | .... .... | 2 0 0 |

குறைந்த சந்தாவில் ஆரம்ப ஆசிரியர்களுக்கெனவே உழைத்து வரும் சஞ்சிகை. ஆரம்பக் கல்வியில் உழைத்துவரும், ஆசிரிய மானேஜர்கள், தாலூக்காபோர்டு, முனிசிபாலிடி ஆசிரியர்கள், ஆசிரியர்கள், மிஷன் பாடசாலை, பஞ்சாயத்து பாடசாலை ஒருவித உபகாரமும் பெறாத பாடசாலைகள், ஆண் பாடசாலை பெண் பாடசாலை, ஆகிய எல்லா ஸ்தாபனங்களையும் ஒன்று படுத்தும் "ஆரம்பக் கல்வி" என்னும் இந்த சஞ்சிகையின் மூலமாய் தத்தம் குறைகள் நீங்கி, ஆரம்பக்கல்வி யாசிரியர்களும், காலச் சக்கரத்தின் முன்னணியில் நிற்க வேண்டும் என்பதே நமது நோக்கம். ஆகையால் ஒவ்வொரு ஆரம்ப ஆசிரியர்களும் அவர்களை நிருவகிக்கும் ஸ்தாபனங்களும் நமது சஞ்சிகையை ஆதரித்து பெண்கள் பகுதி, சிறுவர் பகுதி, ஆசிரியர் பகுதி, கல்வி வளர்ச்சி, என்ற பகுதியின் கீழ் விஷயதானமும், பொருளுதவியும் செய்து வளர்த்த வேணுமாய்க் கோருகிறேன்.

இங்ஙனம்:

பத்திரிகை, ஆசிரியர்.

## விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| முழுபக்கம் ஒரு தடவைக்கு | ரூ. | 10 0 0 |
| அரை பக்கம் | ,, | ,, | 5 0 0 |
| கால் பக்கம் | ,, | ,, | 3 0 0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதவும்

13 JUN 1935

உ

ஓம்: பரப்பிரஹ்மணே நம:

# ஆரம்பக் கல்வி

சென்னை மாகாணத்திலுள்ள, ஆரம்பாசிரியர்கள், ஆசிரிய மானேஜர்கள், மானேஜர்கள், அபிவிருத்திக்கும், முன்னேற்றத்திற்கும் உழைக்கும் ஓர் உயர்தர செந்தமிழ் மாதாந்திர பத்திரிகை.

பத்திராதிபர்:— பி. வீரராகவன்.
(ஜில்லாக் கல்விச் சபை அங்கத்தினர்)

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

மலர், 1. } ஸ்ரீமுக ௵ தைமீ 1934 ௵ ஜனவரி { இதழ், 8.

## கடவுள் வணக்கம்.

ஒருமையுட னினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்த முறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமை வேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண் டும்பொய்மை
பேசா திருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டுமத மானபேய்
பிடியா திருக்க வேண்டும்
மருவுபெண் ணாசையை மறக்கவே வேண்டுமுனை
மறவா திருக்க வேண்டும்
மதிவேண்டு நின்கருணை நிதிவேண்டு நோயற்ற
வாழ்வினான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே (திருவருட்பா)

# ஆரம்பக் கல்வி.

(என். வேங்கடரமணன் ஆசிரிய மானேஜர் சேலம்)

## கல்வி

உலகில் மக்கட் பிறவியே மேலானதாகக் கருதப்படுகிறது. அத்தகைய மக்கள் அடைதற்பால பெரும் புருடார்த் தங்கள் அறம், பொருள், இன்பம் வீடெனும் நான்கென்பர். அந் நால்வகைப் பேறுகளை எளிதில் பெறச் சாதனமாயிருந்து உதவிபுரிவது கல்வியெனுங் கருந்தனமேயாம். கல்வியாலேயே மக்களின் அறிவு வளர்ச்சியுறுகிறது. "தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்தூறு மறிவு" என்ற பொய்யில் புலவரின் பொன்மொழி இதனை வலியுறுத்தும். எனவே மக்கள் அறிவு வளம் பெற்று, இந்நிலவுலகில் இன்பங்களை இனிது ஈட்டிச் சுகமே வாழ்ந்து மேன்மையெய்த வேண்டுமாயின் கல்வி கற்றல் இன்றியமையாததாகும். மேலுங் கல்வியே மக்களுக்குக் கண்களாகப் பாராட்டப்படுகிறது. கல்வி கற்றோரே மக்களினத்தவராகவும் எண்ணப்படுவர். இக்கருத்துக்களை "எண்ணென்ப வேனை எழுத்தென்ப இவ்விரண்டுங்-கண்ணென்ப வாழுமுயிர்க்கு," "விலங்கொடு மக்களனையர் இலங்கு நூல்—கற்றாரோ டேனையவர்" என்ற தமிழ் மறை வாசகங்கள் மறைவின்றிக் கூறுகின்றன. ஆகவே, உலகில் ஒவ்வொரு நாட்டினரும் தத்தம் மேன்மையை நாடித் தங்கள் ஜன சமூகத்திற்குக் கல்வியை யூட்டுவதற்கு உரிய வகைகளைக் கண்டு உழைத்து வருகின்றனர். இன்று உலகத்தில் செல்வத்திலும், நாகரீகத்திலும், பிற பண்புகளிலும் சிறந்து விளங்கும் நாடுகள் அனைத்துங் கல்விச் செல்வத்தில் மேலோங்கி வாழுதல் கண்கூடாகும். ஆனால், பழம் பெருமை வாய்ந்த நம் இந்திய நாட்டில் இன்று நூற்றுக்குப் பதின்மர்கூட சீரிய கல்வி பெற்றவரா யில்லையெனின் நமது நிலைமை யென்னென்பது! ஆகவே நமது பொது ஜனங்களும், இந்தியத் துரைத்தனத்தாரும் இந் நாட்டிற் கல்வியறிவைப் பரவச் செய்வதற்குப் பேருக்கங் காட்ட வேண்டுவ தவசியம்.

## பாடசாலைகள்

முற்காலத்தில் நம் முன்னோர்களில் கல்வி நலம் வாய்ந்த பண்டிதர்கள் பலரும் தனித்தனியே பாடசாலைகளைக் கண்டு மாணவர்களுக்குக் கல்வி கற்பித்து வந்தனர். அவற்றுள் தலைசிறந்தவை குருகுலாச்

190333



சிரமங்களாகும். சாதாரணமானவை திண்ணைப் பள்ளிக்கூடங்களென வழங்கின. பழமையான அம் முறைகள் இன்று மறைந்து போயின. இதுகாலையில் கல்வித் திட்டம் மூவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒன்று ஆரம்பக் கல்வி யென்றும், மற்றொன்று மத்தியதாக் கல்வியென்றும், பிறிதொன்று உயர்தரக் கல்வியென்றுஞ் சொல்லப்படுகின்றன. எனவே, இக் கல்வியைப் போதிப்பதற்கென நாட்டில் தோன்றியுள்ள பாடசாலைகளும் முத்திறத்தனவாய் விளங்குகின்றன. இவற்றுள் மக்களுக்குச் சிறு வயதில் முதன் முதலாகக் கற்பிக்கப்படுவது ஆரம்பக் கல்வியாம். ஆகவே, மக்கள் பயிலும் கல்வி யனைத்திற்கும் அடிப்படையாக விருப்பது ஆரம்பக் கல்வியேயாகும். ஒரு நாடு முன்னேற்றமடைய வேண்டுமாயின் அந் நாட்டு மக்கள் கல்வி கற்ற அறிவாளிகளாக யிருத்தல் அவசியம். மக்களனைவரும் குறைந்த பக்ஷம் ஆரம்பக் கல்வியையாவது கற்றிருக்கவேண்டும். ஆரம்பக் கல்வியென்பது ஒன்று முதல் ஐந்து அல்லது எட்டு வகுப்புகளெனவுங் கூறலாம். இவ் வகுப்புகளில் சிறுவர், சிறுமிகள் தாய்மொழியில் எழுதவும், படிக்கவும், கணக்குப் போடவும் கற்றுக்கொள்ளுவதோடு, பூகோளம், சரித்திரம், அரசியல், விஞ்ஞான சாத்திரம் முதலியவற்றில் சிறிது ஆரம்ப அறிவைப் பெறுகின்றனர். கல்வி கற்கும் நமது மக்களில் பெரும்பாலோர் இவ் வாரம்பக் கல்வியோடு நின்றுவிடுகின்றனர். மிக மிகச் சிலரே உயர்தரக் கல்வியையும், கலாசாலைப் படிப்பையுங் காண முற்படுவாராவர். இன்று பிரிட்டிஷ் இந்தியாவில் ஆரம்பக் கல்வியைக் கற்போரின் எண்ணிக்கையைக் கவனிக்குமிடத்து நூற்றுக்கு 2.8 பேர் எனவே, சிறுவர்களுள் நூற்றுக்கு 4.5-ம், சிறுமிகளுள் 0.9-ம் எனத் தெரியவருகிறது. இதே சமயத்தில் அந்நிய நாடுகளில் ஆரம்பக் கல்வியைக் கற்பவரின் கணக்கை நாம் கவனிக்க வேண்டும். அமெரிக்காவில் ஐக்கிய மாகாணங்களில் நூற்றுக்கு 19.8-ம், ஸ்காட்லாந்தில் நூற்றுக்கு 17.3-ம், இங்கிலாந்து, வேல்ஸ் என்ற இரு தேசங்களிலும் 100-க்கு 16.5-ம், ஜெர்மனியில் நூற்றுக்கு 13.9-ம், ஜப்பானில் நூற்றுக்கு 13.0-ம் ஆமென்றால் நமது நாட்டின் தாழ்வான நிலை நன்கு விளங்கலாம். இத்தகைய நிலையில் நமது நாட்டுக்குப் புதிய அரசியல் சீர்திருத்தங்களும் விரைவில் வரப்போகின்றன. அவற்றுள் வாக்காளர்களாகிய பொதுஜனங்கள் தங்கள் வாக்குகளைத் தக்காரைத் தேர்ந்தெடுக்கும் முறையில் உபயோகப்படுத்த வேண்டும். இன்றேல் இப்போது

ஸ்தல ஸ்தாபன போர்டுகள் பெரும்பாலாவற்றுள் நடைபெற்று வருவதுபோன்ற ஊழல்கள் மிகுந்து, நாட்டின் அமைதியையும், அரசாங்கத்தையும், ஜனங்களையும் பாதிக்குமென்பதிற் றடையில்லை. ஆகவே, இச் சமயத்தில் துரைத்தனத்தாரும், தேசாபிமானிகளும், பொதுமக்களும் பெரிதுங் கவனஞ் செலுத்தி, நாட்டில் கல்வியறிவை யெங்கும் பரவச்செய்ய விரைந்து வேலை செய்யவேண்டும்.

## ஆரம்பப் பாடசாலைகள்

தற்போது ஆரம்பக் கல்வியை நாட்டில் பரவச் செய்வதற்காகத் தோன்றியுள்ள ஆரம்பப் பாடசாலைகள் பலவாயினும் அவைகளை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். ஸ்தல ஸ்தாபன சபைகளால் நடத்தப்படும் பாடசாலைகளும், மத ஸ்தாபனங்களால் (மிஷனரிகள், கோயில்கள், மடங்கள்) நடத்தப்படும் பள்ளிகளும் கிராமப் பஞ்சாயத்துக்களால் காணப்பட்டுள்ள பாடசாலைகளும், தனி நபர்கள் பொறுப்பில் (பிரைவேட் மானேஜமெண்டுகள்) நடத்தப்பெறும் பள்ளிக்கூடங்களுமெனக் குறிப்பிடலாம். இவை யனைத்தும் வித்தியா இலாகா அதிகாரிகளால் அனுமதிக்கப்பெற்ற பாடத் திட்டங்களைக் கொண்டு சிறுவர் சிறுமிகளுக்குக் கல்வி கற்பித்து வருகின்றன. இத்தகைய பாடசாலைகளை மேற்பார்வையிட்டு அவற்றிற்கு ஏற்ற உதவிபுரிந்து வருவதற்காக வேண்டிய உத்தியோகஸ்தர்களும் நியமிக்கப்பட் டிருக்கின்றனர். ஆரம்பப் பாடசாலைகளுக்கு உதவிபுரிந்து, ஆரம்பக் கல்வியை மக்களிடை பரவச் செய்வதற்காகத் துரைத்தனத்தாரும் ஆண்டுதோறும் பணத்தைப் பிரத்தியேகப் படுத்திச் செலவிட்டு வருகின்றனர். அயல்நாடுகளில் அவ்வந் நாட்டுத் துரைத்தனத்தார் தமது வருவாயில் கல்விக்கெனச் செலவிடும் தொகையின் விகிதத்தைவிட இந் நாட்டுத் துரைத்தனத்தார் செலவிடும் விகிதம் மிக மிகக் குறைவே யென்பதை நாம் மறக்க முடியாது. எனினும், செலவிடுந் தொகைக்காயினும் எதிர்பார்த்தபடி தக்க பயன் கிடைப்பதில்லை யென்பதைப் புள்ளி விவரங்களோடு பல அறிவாளிகள் தெள்ளிக் கூறியிருக்கின்றனர். அதற்குக் காரணங்கள் பலவாம். ஆரம்பக் கல்விச் சட்டத்தை அடிக்கடி மாற்றுவதும், ஆரம்பக் கல்வி ஸ்தாபனங்கள் பலவற்றை அதிகப் பணச் செலவுகளுடன் ஏற்படுத்துவதும், ஆரம்பாசிரியர்களுக்குப் போதிய உதவியை யளிக்காமற் போவதும், இதுபோன்ற இன்னுஞ் சில குறைபாடுகளுமே காரணங்க ளென்னலாம். மேலும் நம் நாட்டிற்



பெரும்பாலும் பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்க வேண்டுமென்ற எண்ண மில்லாதவர்களா யிருக்கின்றனர். அப்படிப்பட்டவர்களைக் கட்டாயப்படுத்தினாலன்றி அவர்களுடைய குழந்தைகளைப் பாடசாலைக்கு அனுப்பச் செய்ய வியலாது.

சில ஆண்டுகளுக்கு முன்வரையில் ஊர்கள்தோறும் தனி மனிதர்கள் தங்கள் பொறுப்பில் பாடசாலைகளை வைத்து நடத்தி வந்தனர். ஆரம்பத்தில் துரைத்தனத்தார் அத்தகைய பாடசாலைகளுக்குப் பொருளுதவிபுரிந்து ஆதரிக்க முற்பட்டனர். ஆயினும் நாளடைவில் கட்டிடங்கள், பெஞ்சுகள் முதலிய படாடோபங்கள் மிகுந்த கவர்ன்மெண்ட் அல்லது போர்டு பாடசாலைகளை ஆங்காங்கே ஸ்தாபித்து, அவற்றில் சம்பளம் பெறும் ஆசிரியர்களை நியமித்துக் கல்வி கற்பிக்கச் செய்தனர். இம் முயற்சியால் ஏற்கெனவே தனிப்பட்ட ஆசிரியர்களால் நடத்தப்பட்டு வந்த பாடசாலைகள் பலவும் நாளடைவில் மூடப்படலாயின. நேர்முறையில் கிராமப் பொதுமக்களின் அபிமானத்தைப் பெற்று நடந்துவந்த பாடசாலைகள் மூடப்பட்டு, அவற்றிற்குப் பதிலாக போர்டு பாடசாலைகள் ஸ்தாபிக்கப்படலாயின. இரண்டு ஆசிரியர்கள் வேலை செய்யும் (பிரைவேட் மானேஜ்மெண்டுக்குட்பட்ட] ஒரு பாடசாலைக்கு ஒரு ஆண்டில் துரைத்தனத்தாரால் கொடுக்கப்பெறும் கிராண்ட் எனும் உபகாரப் பொருள் எவ்வளவு அதிகப்படினும் 350 ரூபாய்க்கு மேற்படுவதில்லை. ஆனால் அதே இரண்டு ஆசிரியர்களைக் கொண்டு ஒரு போர்டு பாடசாலை நடைபெறுவதற்குக் குறைந்தது ஆண்டு ஒன்றுக்கு 500 ரூபாய்க்கு மேற்பட்டுச் செலவாகவேண்டும். இப்படியிருக்கையில், சமீபத்தில் துரைத்தனத்தார் செய்துவரும் முயற்சிகள் தனி நபர்கள் நடத்திவரும் சொந்தப் பாடசாலைகளை யொடுக்கிப் போர்டு பாடசாலைகளைப் பெருக்கிவருவதாக விருப்பதைப்பற்றி என்ன கூறுவது? இதுபோழ்து துரைத்தனத்தார் "ஆசிரியர்கள் எந்த வகுப்புவரையிற் படித்திருக்கிறார்கள்? அவர்கள் பெற்றுள்ள யோக்கியதா பத்திரங்களென்ன?" என்பது போன்றவற்றில் அதிகக் கவனஞ் செலுத்தி, அனுபவமும், உற்சாகமும் படைத்த ஆசிரியர்கள் பலரைப் புறக்கணிக்க முயலுகிறார்களன்றி, அவ் வாசிரியர்களிடம் படிக்கும் மாணவர்கள் எம்மட்டும் தேர்ச்சியுறுகிறார்க ளென்பதைக் காணோம். சில வருடங்களுக்கு முன் துரைத்தனத்தார் நடத்தி வந்ததுபோல் "பிரைமரி," "லோயர் செகண்டரி" என்ற பரீக்ஷைகளைத் தனிமை

யில் நடத்திப் பாடசாலை மாணவர்கள் அவற்றிற்கு ஆஜராகித் தேர்ச்சியுற்று யோக்கியதா பத்திரம் பெறுமாறு ஏற்பாடு செய்தால், ஊக்கமுள்ள ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் உற்சாகமூட்டியதாகும். இம்முறையில் அதிகப்படியான மாணவர்களைத் தேர்ச்சியடையச் செய்யும் பள்ளிக்கூடங்களின் ஆசிரியர்களுக்கு அதற்கேற்ப அதிகப்படியான கிராண்ட் அல்லது உபகாரத் தனத்தைக் கொடுத்து மேன்மேலும் ஊக்க முண்டாக்கலாம். மேலும் ஆசிரியர் ஒருவர் அல்லது இருவர் வேலை செய்யும் பள்ளிகளில் ஐந்தாவது பிரைமரி] வகுப்பை நடத்திப் பிள்ளைகளை யோக்கியதா பத்திரங்கள் பெறச் செய்வதற்கு அதிகாரிகள் இடங் கொடுப்பதில்லை. எனவே, அத்தகைய பாடசாலைகளில் நான்கு வகுப்புகளே நடத்தப்பட வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுகிறது. உற்சாகமுள்ள மாணவர்கள் தாழ்ந்த தரமான ஐந்தாவது [பிரைமரி] வகுப்புத் தேர்ச்சிப் பத்திரத்தையாவது பெறவேண்டுமென்றால் கிராமாந்தரங்களில் ஐந்தாவது வகுப்பு அங்கீகாரமான யள்ளிகளுள்ள கிராமங்களைத் தேடிச் செல்லவேண்டியிருக்கிறது. எத்தனை ஆசிரியர்கள் வேலை செய்தாலென்ன? ஆசிரியர்கள் எந்த கிரேட்டில் பயின்றிருந்தாலென்ன? அவர்களிடம் பயிலும் மாணவர்கள் ஐந்தாவது (பிரைமரி] வகுப்புக்குரிய பாடத் திட்டங்களில் தேர்ச்சியுற்றிருக்கிறார்களா வென்பதைப் பரீட்சித்து யோக்கியதா பத்திரங்கள் வழங்குவதற்கு அதிகாரிகள் ஏன் முயற்சி செய்யலாகாது? நாட்டில் கல்வியைப் பரவச்செய்ய வேண்டுமென்று அதிகாரிகள் செய்யும் முயற்சிகள் கல்வியையொடுக்கி, உற்சாகமும்; உபயோகமுமுள்ள மக்களை உபயோகமற்றவர்களாக்கி வருவதற்குப் பயன்பட்டு வருவது வருந்தத் தக்கதாகும்.

## ஆசிரியர்கள் நிலை

சொந்தப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் நேர் முறையில் கிராமப் பிரஜைகளிடம் சம்பளத்தின் மூலமாகச் சிறிது பொருளுதவியைப் பெறுவதாலும், கிராமத்திய ஜனங்களின் அபிமானமே தமது பாடசாலைகளின் வளர்ச்சியாக விருப்பதாலும் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிப்பதில் அக்கரை காட்டி உழைக்க முற்படுகின்றனர்: போர்டு பாடசாலைகளின் ஆசிரியர்கள் தங்களுக்கு நேர் முறையில் கிராம ஜனங்களிடத்தில் சம்பந்த மில்லாதபடியாலும், மேலும் அடிக்கடி அவர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மாற்றப்படுவதாலும், பின்னும் ஸ்தல ஸ்தாபன போர்டுகளின் சில குறைபாடுகளாலும்



தம் தொழிலில் ஊக்கங்காட்டி வேலை செய்கிறார்களில்லை. மேலும் பொதுவாக ஆரம்பாசிரியர்களுக்கு மேன்மேலும் ஏற்படுத்தப்படும் நிர்ப்பந்தங்கள் பலவாக விருக்கின்றனவன்றி, அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளமும், கிராண்டும் மிக மிகக் குறைவாகவிருக்கின்றது. அதனால், அநேக ஆசிரியர்கள் ஊக்கங் குன்றி, உற்சாகமிழந்து நிற்கின்றனர். தேசாபிமானமும், கல்வியில் பேரூக்கமுங் கொண்டு உழைக்கும் ஆசிரியர்களுக்குத் தக்கவாறு உற்சாக மூட்டப்பட வேண்டும். அயல் நாடுகளி லிருப்பதுபோன்று ஆசிரியர்களாயிருப்போர் மேன்மேலும் இருப்பிடத்தினின்றே படித்து உயர்தரப் பரீக்ஷைகளுக்கு ஆஜராவதற்கு அவகாச மளிக்கப்படவேண்டும். ஆனால், சமீபத்தில் சென்னை துரைத்தனத்தார் வெளியிட்டுள்ள ஜி. ஓ. நெ. 1581 (4—9—33) உள்ள உத்திரவில் எலிமெண்டரி லோயர் கிரேட்டில் போதனா பயிற்சியில் தேர்ந்து சர்ட்டிபிக்கேட்டைப் பூர்த்தி செய்த உபாத்தியாயர்கள் தங்கள் சர்ட்டிபிக்கேட்டை ஹையர் கிரேட்டாக மாற்றிக்கொள்ள வேண்டுமென்றும், அவ்வாறு மாற்றிக்கொள்வதற்குத் தனிமையாக ஹையர் கிரேட் பரீக்ஷைக்கு ஏற்பட்டுள்ள பாடப் புத்தகங்களை வாசித்து வருடா வருடம் மார்ச்சு மாதத்தில் நடைபெறும் ஹையர் கிரேட் போதனா முறைப் பரீக்ஷைக்கு ஆஜராகித் தேர்ச்சிபெற வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்கள். லோயர் கிரேட்டிலும், ஹையர் கிரேட்டிலும் போதனா முறைப் பயிற்சியில் தேர்ந்த உபாத்தியாயர்களுக்கிடையில் அவர்கள் கற்ற பாடங்களில் அதிக பேதங் கிடையாது. லோயர் கிரேட் உபாத்தியாயர்களுக்கு ஒரு சிறிது ஆங்கிலப் பாடமுண்டு. மற்றப்படிக்கு போதனா முறைப் பயிற்சியிலோ, தமிழ், கணிதம், பூகோளம், விஞ்ஞான சாஸ்திரம், சித்திரம் முதலிய பாடங்களிலோ அதிக வேற்றுமைகளோ, உயர்வு தாழ்வுகளோ கூறுவதற்கில்லை. அப்படியிருக்கையில் லோயர் கிரேட் போதனா முறையில் தேர்ச்சியடைந்த ஆசிரியர்களை மீண்டும் ஹையர் கிரேட் பரீக்ஷைக்குரிய எல்லாப் பாடப் புத்தகங்களையும் படித்துப் பரீக்ஷைக்கு ஆஜராக வேண்டுமென்பது வீண் கிரமத்திற் கிடமாகும். தேவையானால் ஆங்கிலம் போன்ற இரண்டொரு பாடங்களை மாத்திரம் படித்துப் பரிக்ஷைக்கு ஆஜராகி ஹையர் கிரேட் யோக்கியதா பத்திரம் பெறச் செய்தலே நியாயமானதாகும். மேலும் லோயர் கிரேட் ஆசிரியர்கள் அனைவரையும் ஹையர் கிரேட் பரீக்ஷையில் தேர்ச்சிபெற வேண்டுமென்று கட்டாயப்படுத்தலுங் கூடாது. எனவே இவற்றைக் கவனித்து அதிகாரிகள் வேண்டிய

திருத்தங்கள் செய்தல் நலமென்று கூறுகின்றோம். ஆரம்பாசிரியர்களும் பலர் ஒன்று கூடித் தங்களுக்கு நேருஞ் சாதக பாதகங்களை அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவர முயற்சிசெய்யவேண்டும்.

வித்தியா இலாகா அதிகாரிகள் ஆரம்பாசிரியர்களை அலட்சியமாய்க் கருதி இகழாமல் அவர்களிடத்து அன்பு காட்டி மரியாதையுடன் அவர்களுக்கு உற்சாக மூட்டவேண்டும். பாடசாலைகளைப் பார்வையிடுங் காலத்திலும் பள்ளி மாணவர்களுக்கு முன்னிலையில் ஆசிரியர்களின் சிறு தவறுகளை எடுத்துக் காட்டி அவமானப்படுத்தும் சில அதிகாரிகளின் செய்கைகளையும் கண்டிக்கப்பட வேண்டும். ஆரம்பாசிரியர்களா யிருப்போர் போதனா முறைப் பரீக்ஷையில் தேர்ச்சியுற்று விட்டதாலேயே தமது கல்வி சம்பூர்ணமடைந்து விட்டதெனக் கருதி யிருந்துவிடாமல், மேன்மேலும் பல புத்தகங்களைப் படித்துத் தங்கள் கல்வியறிவை வளர்த்து வரவேண்டும் "ஆசிரியர்கள் எப்பொழுதும் ஒரு மாணவராக விருக்கவேண்டும்" என்று ஒரு பெரியார் கூறியிருக்கின்றார். அஃது உண்மையான வாசகமாகும். ஆசிரியர் ஒழுக்க முடையவராகவும், நற் பழக்கங்க ளுடையவராகவும், பொறுமையுடையவராகவும், அன்புடையவராகவும், கல்வியில் ஊக்க முடையவராகவும் இருத்தல் வேண்டும். ஆசிரியர் தற்கால உலக வர்த்தமானங்களை அறிந்துவர வேண்டுவதோடு, பத்திரிகைகளைப் படிக்கும் பழக்கத்தைக் கைக்கொள்ள வேண்டும். சாரணியக்கம், புத்தகாலய இயக்கம், ஐக்கிய நாணய இயக்கம் முதலியவற்றிலும் பங்குபெற முயலவேண்டும். உபாத்திமைச் சங்கங்களில் ஊக்கத்துடன் ஆசிரியர்கள் வேலை செய்து அதன் மூலமாய்த் தங்கள் குறைகளை நீக்கிக்கொள்ளக் கிளர்ச்சி செய்யவேண்டும்.

## பாட புத்தகங்கள்

அநேகமாகத் தற்போது ஆரம்பப் பாடசாலைகளில் உபயோகிக்கப்படும் பாடப் புத்தகங்களைப்பற்றி மிகவுங் கவனஞ் செலுத்த வேண்டும். புற்றீசல்களைப்போல் நாட்டில் புத்தகப் பிரசுரகர்த்தர்கள் வெளிப்படுகின்றனர். அவர்களால் எண்ணற்ற புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன. அப் புத்தகங்களும் டெக்ஸ்ட் புக் சங்கத்தாரால் எப்படியோ அங்கீகார முத்திரையைப் பெற்றுக்கொள்ளுகின்றன. ஆனால் அப் புத்தகங்களில் பலவற்றுள் பல பிழைகளும், முரண்பாடுகளும் நிரம்பி யிருப்பதை ஆராய்பவர் அறியக்கூடும். வாசகப் பாடங்களாக வெளிவந்துள்ள பலவற்றுள் பல பிழைகளும்,



வாக்கியப் பிழைகளும், கருத்துப் பிழைகளும், சந்தியிலக்கண முரண்பாடுகளும் காணப்படுகின்றன. வகுப்புகளின் தகுதிக்கேற்ப விஷயங்களும், வார்த்தைகளும், வாக்கியங்களும், சந்திகளும் (புணர்ச்சி) அமைத்தெழுத வேண்டுவது வாசக பாடங்களுக்கு இன்றியமையாததாகும். இதை நன்கு கவனித் தெழுதப்பட்ட புத்தகங்கள் மிக மிகச் சிலவே. மேற்கண்ட பிழைகள் மலிந்த புத்தகங்களுக்குப் பாடப் புத்தகச் சங்கத்தார் எவ்வாறு அங்கீகாரமளித்தனரோ அறிய முடியவில்லை. எனது ஆப்த நேயர்களாகிய ஷை சங்க அங்கத்தினர் சிலரோடு இவ் விஷயத்தைப் பிரஸ்தாபித்தபோது அவர்கள் கூறிய காரணங்களைக் கேட்டு மிக வருந்தினேன். இத்தகைய புத்தகங்களில் ஒவ்வொன்றையும் குறிப்பிட்டு ஆராய்ந்து பகிரங்கமாக அதில் காணுங் குறைகளை வெளியிடுவதற்கு ஆசிரியர்கள் அஞ்சுபவரா யிருக்கின்றனர். அவ்வாறு துணிந்து ஆராய்ந்து எழுதும் ஆசிரியர்களின் கட்டுரைகளை வெளியிடுவதற்குப் பத்திரிகைகளுந் துணிவதில்லை. ஏனென்றால் பணமும், அதிகாரிகளிடத்திற் செல்வாக்கும் படைத்த புத்தகப் பிரசுரகர்த்தர்களின் மனத்தாங்கலுக்குப் பயப்படுவதே காரணமாம். மேலும் ஒரு மாணவன் ஒரு நூலாசிரியரால் முறைப்படி எழுதிய வாசகப் புத்தகங்களைப் படிப்படியாக முதல் வகுப்பிலிருந்து மேல் வகுப்பு வரையில் படித்து வந்தானாயின் வாசக நடையையும், பதங்களின் அமைப்பையும், விஷயங்களின் விவரத்தையும் முறைப்படி கற்றவனாவான். அப்படிக் கன்றி வருடந்தோறும் வாசகப் புத்தகங்களை மாற்றியமைப்பதால் இன்னும் பல குறைபாடுகள் நேருகின்றன. தற்போது ஸ்தல ஸ்தாபன சங்கத் தலைவர்கள் புத்தக வெளியீட்டுக்காரர் பலரைத் திருப்திபடுத்தும் நோக்கங்கொண்டு, ஆண்டுதோறும் பாடப் புத்தகங்களை மாற்றி யமைப்பதோடமையாது, ஒரே ஆண்டில் முதல் வாசகப் புத்தகத்தை மற்றொரு கம்பெனியினின்றும், மூன்றாவது வாசகத்தைப் பிறிதொரு கம்பெனியினின்றும், இவ்வாறே பாடப் புத்தகங்கள் பலவற்றையும் பல கம்பெனிகளினின்றும் பொறுக்கியெடுத்து அவற்றையே அவ் வாண்டில் எல்லாப் பாடசாலைகளிலும் படிப்பிக்க வேண்டுமென்று தமது பாடசாலைகள் அனைத்திற்கும் உத்திரவிடுகின்றனர். இதன் கொடுமையை என்னென்று கூறுவது? அடிக்கடி புத்தகங்களை மாற்றுவதால் குழந்தைகளின் பெற்றோர்கள் பணமுடையால் படும் அவஸ்தையும், பாடங்களைப் போதிப்பதில் ஆசிரி

யர்கள் படும் துன்பமும், பிள்ளைகள் பாடங்களைக் கற்பதில் அடையும் சிரமமும் பிறவும் அதிகாரிகளின் கவனத்திற்கு எட்டுவது கிடையாது. ஸ்தல ஸ்தாபன போர்டுகளின் தலைவர்கள் பாடப் புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பதில் தக்க ஆசிரியர்களின் ஆலோசனையைப் பெறாமலேயே நடந்துகொள்ளும் எதேச்சாதிகார முறை கண்டிக்கப்படவேண்டும். இத்தகைய குறைகளைப் போக்குவதற்கு வித்தியா இலாகா அதிகாரிகள் துணைபுரியவேண்டும்.

## ஆசிரியர்களின் கடமை

சமீபத்தில் கொச்சி சமஸ்தான உபாத்திமார் சங்கத்தில் மைசூர் வித்தியா இலாகா தலைவர் திருவாளர் என். எஸ். சுப்பராவ் அவர்கள் செய்த பிரசங்கத்தில் "ஆரம்பக் கல்வி போதிப்பதன் நோக்கம் வெறுமனே எழுதப் படிக்கக் கற்றுக்கொடுப்பது மாத்திரமல்ல; ஜன சமூகத்திற்கும், கிராமாந்தரங்களின் தேவைகளுக்கும் ஏற்றவாறு கல்வி போதித்து; தேசீய அபிவிருத்திக்கான பல துறைகளிலும் கிராமாந்தர வாசிகள் சிரத்தை எடுக்கும்படி செய்வதும் உபாத்தியாயர்களின் கடமை" என்று வற்புறுத்திக் கூறியுள்ளார்கள். அதை ஆசிரியர்கள் நன்கு கவனிக்க வேண்டும். ஆரம்பப் பாடசாலைகளில் கல்வி கற்றுவெளியேறும் சிறுவர் சிறுமிகளுக்கு அதற்கு மேல் அறிவு வளர்ச்சிக்குரிய பல புத்தகங்களைப் படிக்க வசதி கொடுக்க வேண்டும். தற்போது நாட்டில் தேசீய உணர்ச்சி அதி தீவிரமாகப் பரவி வருகிறது. அஃது நன்மையே யாயினும் அவ்வுணர்ச்சியின் வேகத்தால் பகுத்தறிவு மழுங்கிப் போய், பழமையினிடத்து மூட பக்தியும், புதுமையினிடத்து வெறுப்பும் வளர்ந்து வருகின்றன. இதன் விளைவே தேசியக் கல்வி யெனக் கூறப்படுகிறது. "டப்பி, டமாரம்" என்று எழுத்துக்களைக் கற்பிப்பதும், "பூனை சீறுகிறது, சிங்கம் கர்ஜிக்கிறது" என்று பாடம் படிப்பிப்பதும் தேச பக்தர்கள் என்பவர்கள் சிலரால் எள்ளி நகையாடப்படுகிறது. இதன் உண்மைகளை ஆராய்ந்து பொது மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களைச் சார்ந்ததாகும். தேசீயக் கல்வி என்று நாடெங்கும் பேசப்பட்டதன் காரணமாய்த் தற்போது எழுதப்படும் வாசகப் புத்தகங்களில் புராணக் கதைகள் ஏராளமாகப் புகுத்தி எழுதப்பட்டே பயனாகக் காணப்படுகிறது. இன்றைக்குப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்ட வாசக புத்தகங்களையும், பின்னால் எழுதப்பட்ட புத்தகங்களையும் சற்று ஒப்பிட்



டுப் பாருங்கள். ஒரு சிறுவனுக்கு பூமியின் வடிவத்தைப் பற்றியும், அதன் இயல்பைப் பற்றியும் பூகோள சாஸ்திர சம்பந்தமாய் ஒரு பாடத்தைப் போதித்த பின்னர், அடுத்தபடியாக இரணியாக்ஷன் என்ற அசுரன் பூமியைப் பாயாகச் சுற்றிப் பாதாளத்துக்கு எடுத்துச் சென்றானென்ற வாசக பாடத்தைப் படிப்பிக்கையில், அச்சிறுவன் "இரணியாக்ஷன் எதன் மீது நின்று எவ்வாறு [உருண்டையான] பூமியைப் பாயாகச் சுற்றினான்?" என்று தனக்கேற்பட்ட சந்தேகங்களைக் கேட்குமிடத்து ஆசிரியர் என்ன பதிலைக் கூறலாமென்பதைச் சற்று யோசியுங்கள். இரண்டிலொன்றைப் பொய்யென விளம்ப வேண்டும் அல்லது இரண்டும் உண்மை யெனச் சிறுவனை மிரட்டி வாயை யடக்க வேண்டும் அல்லது போனால் தயாநந்த சரஸ்வதி போன்ற பெரியார் இப் புராணக் கதைக்கு எங்கே, எவ்வாறு, பூகோள சாஸ்திரத்திற்குப் பொருத்தமாக தத்துவார்த்தங் கூறி யிருக்கிறாரென்று ஆசிரியர் தேட ஆரம்பிக்க வேண்டும். இத்தனைத் துன்பங்களுக்கும் சிறு வதப்புகளில் இத்தகைய புராணக் கதைகளைக் கூறாது நிறுத்தி வைத்துப் பிற்காலத்தில் புராணங்களைப் படித்துத் தெரிந்து கொள்ளுமாறு ஏன் விட்டுவைக்கலாகாது? தேசீயக் கல்வி யென்பதற்கு முரண்பட பொருள் கொண்டு நடந்து வரும் நம் மக்களின் அறியாமைக்கு இரங்க வேண்டி யிருக்கிறது. ஆரம்பக் கல்வியை நாட்டில் பரப்பும் அரிய கருமத்தை மேற்கொண்டுள்ள ஆசிரியர்களின் முன்னால் மேலே கூறியது போன்ற பல தடைகளும், இன்னல்களும், படுகுழிகளும், முட் புதர்களும் செறிந்து நிற்கின்றன. இவ் விடையூறுகளை யகற்றிக்கொண்டு ஆசிரியர்கள் முன் செல்ல வேண்டி யிருக்கிறது. அப்படிச் செல்லும் ஆசிரியர்களாலேயே ஆரம்பக் கல்வி விரிவடைய வேண்டும். நமது நாட்டின் நிலைக்குக் கட்டாய ஆரம்ப இலவசக் கல்வித் திட்டம் அமுலுக்கு வரும் நாளே ஆரம்பக் கல்வியின் உயர்வுக்கு உரிய திருநாளாகும். சுபம்.

## தாலூக்கா போர்டு பிரசிடெண்டுகளுக்கு விண்ணப்பம்.

(குஞ்சு விகடன்)

சின்ன சின்ன பட்டணமாம்!—சிங்கார பட்டணமாம்!! சீரங்க பட்டணமா? சித்தூரு பட்டணமா? அல்ல சின்ன பட்டணமே!—அது பெரிய பட்டணமே!! சென்னை நல்ல பட்டணமே!- பெரியதொரு பட்டணமே!! அந்த நல்ல பட்டணத்தில், ஐயாமாரே கேளுங்கள்! கேளுங்கள் - கேளுங்கள்! குஞ்சு விகடன் கூறுவதை குறிப்பாகக் கேளுங்கள்!! கோபிக்காமல் கேளுங்கள்! கொஞ்சம்—கவனமாய்க் கேளுங்கள்! யோசனைகள் பண்ணிமிக—யோசிக்காமல் செய்திடுங்கள்!!

ஐயா மார்களே! என்ன என்று கேட்பீர்களா! பாட்டிக் கதை மாதிரி இம் இம் போட்டு விடாதீர்கள்!

சமீபத்திலே அகில இந்தியா புத்தகாலய பிரசார சங்கத்தார் ஆதரவின் கீழே தமிழன்பர் மகாநாடு நடந்ததைத் தமிழன்பர்களும், தமிழல்லாத ஏனைய அன்பர்களுங்கூடக் கவனித்திருக்கலாமே. அதிலே-அந்த மகாநாட்டிலே தமிழை விருத்தி செய்ய - தமிழர்களின் அறிவை விருத்தி செய்ய—ஏன்? தமிழ் நாட்டிலுள்ள எல்லோருடைய அறிவை விருத்தி செய்ய வேண்டிய வழிகளைப்பற்றி யோசித்துத் தீர்மான மூலமாய் எழுதிவைத்துள்ளார்களாமே! அத்தீர்மானங்களை நிறைவேற்ற—காரியத்தில செய்ய (வெள்ளியத்தில் செய்வதாயிருந்தால் வெகு சிலாக்கியமாயிருக்கலாம்) ஏற்படுத்துவதாயிருந்த சங்கத்தை [கடற் சங்கமல்ல—சங்கு என்போமே - ஆண்டிகளும் தாதர்களும் விசேஷ காலங்களில் ஊதுவார்களே அந்தச் சங்கம்—சங்கு அல்ல. ':சும்மாயிருந்த சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி." என்பார்களே அதுவல்ல.] தமிழன்பர்கள் சங்கம் என்று பேசிக்கொண்டார்களே, அந்தச் சங்கத்தை ஏற்படுத்தாமல் விட்டனராமே! ஏற்படுத்தாமல் விட்டிருந்தால், ஒருக்கால் உண்டு பண்ணியிருக்கலாமோ என்னமோ? உண்டு—சாப்பிட்டு 'ஜீரணம் பண்ணியிருந்தால்! இல்லையென்றுதான் எனக்குக் கேள்வி, இல்லாத விஷயத்தில், அத்தீமானங்களை எப்படி நடைமுறையில் உருவகப்படுத்தப் போகிறார்களோ என்று ஐயுறுகிறேன். அது சமயம், அந்த அகில இந்திய புத்தகாலயப் பிரசாரச் சங்கத்தின் ஞாபகம் வரவே, எறும்பு கடித்தமாதிரி



மூளையில் அந்த விஷயாலோசனை சுறுக்கென்று தைத்தது. விழித்துக் கொண்டோம். இந்தச் சங்கத்தார் இனி அத்தீர்மானங்களை நிறைவேற்ற ஜில்லாக்கள் தோறும் சங்கங்களை ஏற்படுத்தி அவற்றின் மூலம் கிராமப் புத்தகாலயங்களை ஏற்படுத்தி மக்களின் அறிவை விருத்தி செய்வார்களென்று எண்ணுகின்றேன். இவர்கள் இதுபோது கிராமங்கள் தோறும் புத்தக சாலைகள் ஏற்படுத்த முடியுமென்று நான் நம்பவில்லை. இல்லை, இல்லை, நம்புகிறேன். இல்லவேயில்லை, நம்பவில்லை.

ஆகவே, இவர்கள் தாலூக்கா போர்டு பிரசிடெண்டுகளைச் சந்தித்து அவர்களை வசப்படுத்திக் கொண்டால், தாலூகா போர்டு பிரசிடெண்டுகள் எது வேண்டுமானாலும் செய்யலாமாதால்—செய்ய முடியுமாதலால், கிராமாபிவிருத்தி வேலைகளை இலகுவில் செய்து செய்து முடிக்கலாம் என்று என்மனதில் நான் நினைக்கிறேன். உங்கள் மனதில் நீங்கள் எப்படி நினைக்கிறர்கள்?

இந்த அகில இந்திய புத்தகாலய சங்கத்தார் இந்த விகடயோசனையை ஏற்றுக் கொள்ளாமல் இவ்வேலையைத் தொடங்கி, இதனால் தங்களுக்குக் கீர்த்தி - நல்லபேர் சம்பாதித்துக் கொள்ளு முன்பேயே, நம் மாகாணத்திலுள்ள தாலூகா போர்டு பிரசிடெண்டுகளாவது இந்த யோசனை மூலம் தாங்களாகவே இக்காரியத்தைச் செய்ய முற்பட்டு, செய்து நிறைவேற்றினால் தங்கள் தங்கள் போர்டுகளுக்குப் பேரும் புகழும் உண்டாக்கி, தாலுகா போர்டுகளின் பேரில் ஏற்பட்டிருக்கும் அதிருப்தியை நீக்கி, சர்க்கார் தாலூகா போர்டுகளை எடுத்துவிடச் செய்திருக்கும் அறிக்கையைச் சர்க்கார் வாபீஸ் வாங்கிக் கொண்டாலும் கொள்ளலாம். இதனால் எப்போதும் போல் தங்கள் தங்கள் (பிரசெண்டு) பதவிகளும், கவுரவங்களும் நீங்காமல் இருக்கக்கூடும் என்றும் நம்பாமல் இருக்கிறோம்.

ஆகவே, எல்லா தாலுகா போர்டு பிரசென்டுகளும் (பிரன்சு சென்டுகள் என்று வாசித்து விடாதீர்கள். பிரசிடெண்டு என்பவர்கள் எல்லாக் கிராமங்களிலும் புத்தக சாலைகளை ஏற்படுத்த முடியாவிட்டாலும்—நல்ல சாவகாசமில்லாவிட்டாலும், தங்கள் தங்கள் எல்லைக்குள்பட்ட—அதிகாரத்துக்குள்பட்ட [அதிகாரத்தைப்பற்றி பரீட்சாதிகாரிகள் சண்டைக்கு வரமாட்டார்கள் என்று நம்புகிறோம்) உபாத்திமைச் சங்கங்களின் மூலமாவது—உபாத்திமைச் சங்கங்கள் இருக்குமிடங்களிலாவது, ஆங்காங்கு பல கிராமங்களுக்கும்

# வளர்ந்தவரின் படிப்பு

வீ. மாணிக்கம் (தேத்தா குடி தஞ்சை)

நாடு முன்னேற்ற மடைய கல்வியே முக்கியமானது. அக்கல்வியை ஆண்களும் பெண்களும் இளைஞரும் முதியோரும் அவசியம் கற்றறிதல் வேண்டும். அவ்வாறு கற்பார்களே யானால் தாம் யாரென்றும், தனது ஜன சமூகம் இன்னதென்றும், தமது நாடு எத்தன்மைய நிலையில் இருந்து வருகிறதென்றும், எவ்வித கலைகளில் பொலிவுற்றதென்றும், தாம் தமது நாட்டிற்கு எவ்விதத் துணைபுரிய வேண்டுமென்றும் நன்குணர்வர்.

நமது சென்னை இராஜதானியில் 20 வயதிற்கு மேற்பட்டு படித்தவர்களின் எண்ணிக்கை 1000க்கு 214 ஆகிறது. நமது தாய் நாடு மாறுதலடைந்துவரும் இத்தருணத்தில் படிப்பற்ற மாந்தர்கள், நாடு எவ்வாறு மாறுதல் அடைகிறதென்றும், உலகில் எவ்வித தோற்றங்கள் உண்டாகின்றவென்றும் அறியாது ஏங்கி தியங்குகின்றனர்.

---

சென்டராக, சென்டர் புத்தக சாலைகளை ஏற்படுத்த, சென்டர் உபாத்திமைச் சங்கங்களின் காரியதரிசிகளுக்கு அவசர உத்திரவுகள் போட்டு, வட்டமேஜை மகாநாடுகளைக் கூட்டி அவர்களால் தான் சுலபமாக—நன்மையாக முடியவேண்டுமென்றும், இதில்—இதன் கவுரவத்தில் அவர்களுக்கும் பங்குண்டென்றும் ஆசை காட்டி—விளக்கிக் காட்டி, இவ்வேலைக்காகத் தங்கள் தங்கள் போர்டில் பணமில்லாவிட்டாலும், இதற்காக லாட்டரி கிட்டரியோ—பிரைஸ் கிரைஸோ, இவை போன்ற வேறு எவ்வகை உபாயங்களோ தந்திரங்களோ, ஏழை ஆரம்பாசிரியர்களைக் கஷ்டத்துக்குட்படுத்தாமல்—ஆனால், இப்போது நெல் விலைகள் சரசமாயிருப்பதால் ஆரம்பாசிரியர்கள் ஏழைகளாப்—கஷ்டப்படுகிறவர்களாய் இருக்க மாட்டார்கள் என்று தோன்றினால்-நினைத்தால்—நம்பினால்—உறுதி யேற்பட்டால், ஆரம்பாசிரியர்களையும் இச்செயலில் உட்படுத்தி—சம்பந்தப்படுத்தி, இவ்விஷயத்தில் ஆரம்பாசிரியர்கள் கடமைப்பட்டவர்களாதலால், இச் செயலை உடனே செய்து முடித்தால் பெரிதும் நலமாயிருக்குமென எண்ணுகிறோம். இந்த யோசனையை, இப்போது கூடியிருக்கும் சட்டசபைக் கூட்டத்தில் கொண்டு வந்து, தாலுகா போர்டுகளை எடுத்து விடும் யோசனையை அடுத்த சட்டசபைக் கூட்டத்துக்குத் தள்ளிவைத்துக் கொள்ளும்படி, கனந்தங்கிய கவர்னர் பெருமான் அவர்களை புது ஆக்டிங் கவர்னர் பெருமானாக வரப்போகிறவர் நம் இந்திய மகானாயிருப்பதால் இவர் மூலம் கேட்டுக்கொண்டு தங்கள் யோசனையை நிறைவேற்றுமாறு ரொம்ப ரொம்பப்பெரிதும் பெரிதுமாய் வேண்டிக் கொள்ளுகின்றேன்.



அரசாங்கத்தார் இவர்கள் குறைகளை நீக்கும் பொருட்டு 1928, 29-ல் கொஞ்சம் அனுமதி அளித்தனர். அதன் பலனாக 1930, 31ல் நமது ராஜதானியில் அவர்களுக்கென ஏற்பட்ட இராப் பள்ளிக்கூடங்கள் 5414 இருந்தன. ஆனால் காலக் கொடுமையால் திரவிய சகாயத்தை அதிகம் குறைத்தபடியால் அநேகமாய் பள்ளிக் கூடங்கள் மூடப்பட்டன. அதுவுமின்றி, போதிய படிப்பில்லாத உபாத்தியர்களை அவ்வித பள்ளியில் நியமிக்கப்படுவதாலும், சிறுவர்களுக்கேற்பட்ட பாடங்களை ஒழுங்கற்ற முறையில் போதிக்கப்படுவதாலும், பகல் பள்ளிக்கூடங்களில் வேலை செய்யும் குறைந்த சம்பளமுள்ள ஆசிரியர் அதன் வாயிலாய் சிறிது பொருள் சம்பாதிக்க முயல்வதுமே, அவ்வித பள்ளிக் கூடங்கள் நடைபெறாததற்கு பெரும் முட்டுக் கட்டைகளாகின்றன.

ஆகையால் அரசாங்கத்தார் மேல்கண்ட குறைகளை நீக்கி, போதிய திரவிய சகாயமும் அளிப்பார்களானால் அவ்வித பள்ளிக் கூடங்கள் புத்துயிர் பெற்று இனிது ஓங்குமென நம்புகிறோம்.

அப்பள்ளிக்கூட உபாத்தியாயரின் தன்மை:—இவர் மிக்க தோற்றமுடையவராயும், கம்பீரமாயும், கண்ணியமாயும், மரியாதை பெறுபவராயும், அங்குள்ள ஜனசமூகங்களால் புகழப்படுபவராயும், இரக்க முள்ள சிந்தையுடையவராயும், அவரது மாணவரிடை அன்னியோன்யமாய் பழகும் சுபாவமுடைய வராயும், ஜன சமூகத்திற்கென பாடுபடும் ஊக்க முடையவராயும், யாவரையும் தமது சொற் பொழிவால் மகிழச் செய்யும் ஆற்றலுள்ளவராயும், போதிப்பதினால் திறமையுடையவராயும், தேசியமான பாஷையில் மிக்க வல்லுனராயும், நன்கு பேசக்கூடியவராயுமிருப்பதுடன் தமது மாணவர்களின் வீடுகளில் நடக்கும் விசேஷங்களுக்கு தாமும் தன்னாலியன்ற உதவி புரியும் குணமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

போதிக்கப்படவேண்டிய பாடங்கள்:—எழுதப் படிக்க அறிந்தபின், அவரவரின் சரீரம், உடை, ஆகாரம் இவைகளை நன்குவைக்க வேண்டிய பாடம், கிராம சுகாதாரம், கிராமத்திலுள்ள சுய ஆட்சி பரிபாலனம், அந்நாட்டின் மகான்களின் சரிதம், விவசாயம், நாடோறும் நடைபெறும் புதிய விஷயங்கள், இவைகள் அடங்கிய பாடங்கள் போதித்தல் வேண்டும்.

இவ்வித புத்தகங்கள் இல்லையாதலால் பலர் அவ்வித புத்தகங்களை வெளியிட முன்வரவேண்டும். உத்தியோகத்தினின்று நீங்கிய பெரியோர், கலாசாலை மாணவர், உத்தியோகஸ்தர்கள் அவர்கள் படிப்பில் ஊக்கமெடுத்துக் கொள்ளல் வேண்டும். நமது நாடு புராணங்களும், ஆகமங்களும் நிறைந்த நாடாதலால் ஆங்காங்கு ஹரி கதா காலக்ஷேபம் நடத்தல் நலம், மற்றும் கற்றவரின் படிப்பு விருத்தியடைய சில புத்தக சாலைகள் அமைத்து யாவருக்கும் பயனளிக்குமாறு அரசாங்கத்தார் உதவி புரிதல் வேண்டும்.

190333

# நாகப்பட்டணம் ரேஞ்சு
## ஆரம்பப் பாடசாலைகளின்
## கல்வி யபிவிர்த்தி

நாகப்பட்டணம் ரேஞ்சில் சென்ற ஆறுமாத காலமாய் ஆரம்பக் கல்வி பல விதத்தில் அபிவிர்த்தி யடைந்து வருகின்றது. அதற்கு முக்கியகாரணம், இந்த ரேஞ்சிற்குப் புதிதாய் நியமிக்கப்பட்டு வந்திருக்கும் டிப்டி இன்ஸ்பெக்டர் திரு. கெ. சம்பந்தம் பிள்ளையவர்களின் நன்முயற்சியேயாகும்.

அன்னாரவர்களைப் போன்ற உண்மையான உழைப்பாளிகள் ஒரு ரேஞ்சிலிருந்தால் கல்வி முன்னேற்றமடையு மென்பதற்குச் சிறிதும் ஐயமேயில்லை—ஷை இன்ஸ்பெக்டரவர்கள் சென்ற ஆறு மாத காலமாய்ச் செய்துவரும் முயற்சிகள் பின் வருமாறு

1. பாடசாலைகளின் கல்வித் திட்டங்கள் சரியாக அமைக்கப் பெறவில்லை யென்பதை யுணர்ந்து, தாமே ஓர் கல்வித் திட்டம் தயார் செய்து, அதை தேர்ந்த அனுபவமுள்ள ஆசிரியர்களைக் கூட்டி அக் கூட்டங்களில் விடாமல் மூன்று நாள் விஷயங்களைப் பரிசீலனை செய்து, ஷை திட்டத்தை முடித்து, 1 முதல் 8 வகுப்புகளுக்குள்ள பாடதிட்டத்தை ஒழுங்கு படுத்தி, அச்சிட்டு ஒவ்வொரு உபாத்தியாயரும் அதை நன்குணர்ந்து, கற்பிக்குமாறு ஏற்பாடு செய்திருக்கிறார்.

2. கல்வித் தேர்ச்சி முற்றுப்பெறாத கீழ்தரப்படிப்புள்ள உபாத்தியாயர்களுக்கு, ஸ்பெஷலாய்க் கல்வியில் தேர்ச்சியுண்டு பண்ணக் கருதி, சில பெரிய ஸ்கூல்களில் ஸெண்டர்கள் ஏற்படுத்தி, அதில் தேர்ந்த உபாத்தியாயர்களைக் கொண்டு, ஒவ்வொரு பாடத்தையும் பூராவாய் (ஓர் கல்வித் திட்டம் தயார் செய்து) தமது பார்வையில், ஓய்வு நாட்களில் ஸ்பெஷல் கிளாஸ்கள் வைத்து நடத்திவருகிறார்.

3. ஆரம்பக் கல்விக்கு அடிப்படையே ஆசிரியர் சங்கங்கள் என்பதை யுணர்ந்து, அவைகளைப் பல விதத்தில் சீர்திருத்தி யமைத்திருக்கிறார்கள்:—

4. தன்னலப்பற்றை யொழித்துப் பொதுநலமே பெரிதெனக் கருதி, சாரணர் படைத் தலைவராயிருந்து, சாரணர் இயக்கத்தை ஆரம்பித்து அதில் பல உபாத்தியாயர்களையும் மற்றவர்களையும் சேர்த்து, நடத்திவருகிறார்.

5. தமிழ்மொழி வளர்ச்சிக்காகப் பல துறைகளிலும் பாடு பட்டு வருகிறார்—புஸ்தக சாலைகளை மேல்பார்வை செய்தும் தமிழ் சங்கங்கள் பல ஸ்தாபித்தும் தர்ம பூஷண புஸ்தக சாலையின் வருஷோத்ஸவத்தில் தலைமை வகித்தும் பல அரிய கட்டுரைகளை எழுதியும், தமிழ் கல்விக்கும் பேருதவி செய்து வருகிறார்.

இம்மகான் நீடூழிகாலம் வாழ்ந்து இந் நாகை ரேஞ்சி முன்னேற்றமடைய, இறைவன் அருள் புரிவாராக.

இங்ஙனம்

கெ. கிருஷ்ண மூர்த்தி அய்யர் சங்கக்காரியதரிசி,

# உதய குமாரன்
## (வஞ்சித்தாரை தெய்வம் தண்டிக்கும்)
## ஓர் இனிய தமிழ் நாடகம்

(முன்தொடர்ச்சி)

### சயிந்தை மண்டபம்.

சயிந்தை:—(பதுமுகன் பிரவேசம்) தாங்கள் நும் நண்பரைப் பிரிந்துத் தனியே முகவாட்டத்துடன் இவண் வந்த காரணம் யாதோ?

பதுமுகன்:—அம்மணீ! விசேஷம் ஒன்று மில்லை. தங்கள் விவாக காலத்து நேரிட்ட அரசர் பகை தங்களுக்கு நன்றாகவே தெரிந்திருக்கின்றது. மேலும் இந் நாட்டரசன் மகா சண்டாளனென்பதும், உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைக்கும் முண்ட மென்றும் தாங்கள் அறிந்ததே. நாங்கள் இருவரும் வேட்டைக்குச் செல்லும்போது பட்டத்து யானை மிகச் செருக்கினால் யாவரையும் வழிமறித்துத் துன்பம் செய்துவர, சீவோதயன் அது கண்டு மனமாற்றாய் ஓர் அம்பெய்து அதன் துதிக்கையைத் துணித்தான். பின்னர் நிகழ்ந்தன யாமறியோம். நாங்கள் வேட்டையினின்று திரும்பிவரும்போது துஷ்டத் தும்மன் மைத்துனன் மதனனும் சில வீரர்களும் யாங்களறியா வண்ணம் பின் புறமாகவந்து கயிற்றால் பிணித்துச் சிறைப்படுத்தி என்னை யடித்து வெருட்டினர்.

சயிந்தை:—ஆ! நாதா என்று அழுது கொண்டே கீழே சாய்தல். அழுகுரல் கேட்டு வைரமணிச் செட்டியும் அவன் மனைவி குண சுந்தரியும் சயிந்தையை வாரியெடுத்து மடிமேல் வைத்து மூர்ச்சை தெளிவித்தல்.

சயிந்தை:—என் நாதரின்றி நானெப்படி உயிர் வாழ்வேன். என்னை மணந்த காலத்து வீராதி வீரரான அந்த மன்னரை வென்று மணமாலை தரித்து அவர் குழாத்துள் ஓர் சிங்கம்

போலல்லவோ நின்றார். அவரை இவ் வண்ணம் அறியாதபடி சிறைப்படுத்தலும் மன்னர்க்கு நீதியோ. சிறைப்படுத்தியபோது அவராண்மை எவ்விதம் கட்டுப்பட்டதோ. அக்காலத்து அவர் மனம் என்ன வென்ன எண்ணியதோ. அச் சண்டாளன் என் நாதர்க்கு என்ன வென்ன தீங்கிழைப்பானோ நான் என் செய்கேன். ஆ தெய்வமே (அழுதல்)

குணசுந்தரி:—கண்மணீ! நீ வருத்தப்பட வேண்டாம். நம்சேவகனுக்கு ஏது தீங்கும் நிகழாது. நம் மன்னனுக்கு ஏதோ கெட்டகாலம் சம்பவித்து விட்டது. அதனால்தான் அவன் நம் கண்மணியின் விரோதத்தைக் கொள்ளுகின்றான். நீ ஏதுக்கும் வருந்த வேண்டாம். நீ வருந்தி நைந்தாயென்று நின் நாயகன் கேள்விப்பட்டால் மிகவும் வருந்துவன் அம்ம! வேண்டாம். தெய்வம் நமக்குத் துணையிருக்கும்.

சயிந்தை:—மாமி! நான் எப்படி என் நாதரைப் பிரிந்து உயிர்தரிப்பேன். புள்ளினத்துப் பெண்ணன்றிலன்றோ தனது துணை ஆண் அன்றிலைப் பிரிந்தவுடனே உயிரை இழக்கின்றது. பாழும் என்னாவி இன்னும் ஒழிந்திலதே. ஆ! தெய்வமே உனக்கும் இரக்கமில்லையா. நான் மணந்து இன்னும் ஓராண்டு காலமாயினு முடியவில்லையே. இதற்குள் எனக்கு இப்படிப்பட்ட கதிவருமா. ஆ தெய்வமே என்றழுதல்.

குணசுந்தரி:—அம்மணீ! நீ மன்னர் மகளாயிருந்தும் நின்னிடத்துப் பேதமை அதிகமாக விருக்கின்றதே. நினக்குச் சற்றும் தைரியமில்லையே. நினக்குள்ள துயரம் எங்களுக்கும் உள்ளது. சூர்ய சந்திராதி தேவர்கள் கூட சிறிது காலம் இராகு கேதுக்களால் விழுங்கப்பட்டு வருந்துகின்றனர். நம் கண்மணிக்கு ஏது குறைவும் வாராது. நீ வருந்தல் வேண்டா. இனி நடக்க வேண்டிய காரியத்தைக் கவனிப்பாம்.

பதுமுகன்:—அப்பா, செட்டியாரே, நாம் வீணில் காலகரணம் செய்து கொண்டிருந்தால் நம் சயிந்தைக்கும் அப்பாதகன் ஏதாயினும் தீங்கிழைக்க நேரிடும். இப்போதே சயிந்தையை யாவரும் அறியா வண்ணம் தன் தந்தையிடம் அனுப்பி வைப்பதே நன்று.



சயிந்தை:—மாமா! என் நாயகர் என்னைப் பிரிந்திருந்தும் அவர் வாழும் நாட்டையும் பிரிந்து என் தந்தையிடம் செல்லச் சொல்வது நுமக்கழகோ. என் நாயகர் சிறைப்பட்டுத் துன்புறுவதும், நான் என் தந்தையிடமிருந்து இன்புறுவதா மாமா எனக்கேது கேடுவரினும் என் நாயகர் வாழுமிடத்திலேயே இருந்து உயிர் இழப்பன். என்னன்னை வீட்டிற்கு என்னாதரின்றிச் செல்லேன்.

வைரமணி:—மங்கையர்க்கரசே நீ மிகவும் கற்றறிந்தவளாய் இருந்தும் இப்படியோசியாது பேசுவதழகன்று. சண்டாளனான துஷ்டத் தும்மன் தன் வஞ்சகத்தால் அரசைக் கவர்ந்து, பின்னர் அரசனைக் கொன்றான் மேலும் நின் நாயகனையும் வஞ்சனையால் சிறைப்படுத்தி யுள்ளான். அவன் நின்கற்பினுக்கும் கேடிழைக்க வஞ்சகச் சூழ்ச்சி தேடினும் தேடுவன் நீ நின் தந்தையிட மிருப்பின் நினக்காவது நின்கற்பினுக்காவது ஏது அழிவும் நேரிடாது. திக்கற்ற எங்களிடம் நீ இருப்பின் நினக்கு நீயே ஆபத்தைத் தேடிக் கொள்வதல்லாமலும் நின் நாயகன் திரும்பிவரின் நினக்கு ஏதாயினும் துன்பம் நேரிட்டதென்று அறிந்தால் அவனும் துன்பத் தாழ்ந்து உயிர்துரப்பன். நானும் உடன் வருகின்றேன்.

சயிந்தை:—தாங்களும், மாமியும் என்னுடன் வருவதென்றால் நானும் வருகின்றேன். ஆ தெய்வமே இப்படிப்பட்ட கதியும் ஏழை மீது இரக்கமில்லாது விதிக்கலாமா. என்னைப்போலொத்த பெண்கள் தத்தம் நாயகர்களோடு சுகமாக விருந்து, தத்தம் மணாளரோடு சந்தோஷமாகத் தாய் வீடு செல்லுதலில்லையா. நான் இன்னும் ஒரு முறை கூட என் நாதரோடு தந்தைவீடு சென்றிலனே. தனித்தும் போவதோ (அழுதல்)

குணசுந்தரி:—(அழுது கொண்டே) என்ன செய்வது. பாழுந் தெய்வத்திற்குக் கண்ணில்லையே. உன் முகத்தைப் பார்த்தாவது இரக்கம் வைக்கப்படாதா. என் செய்வது.

வைரமணி:—இனி வருந்துவதில் பிரயோசனமில்லை. நாம் இப்பொழுதே. இந்த விடத்தை விட்டுச் செல்லவேண்டும். யாவரும் புறப்படுங்கள் போவோம். அப்பா பதுமுக! நீயும் உடன் வருகிறாயா.

பதுமுகன்:—நான் இப்பொழுது உங்களுடன் வருவது சரியன்று. நான் இவ்விடத்திலேயே யிருந்து நடக்கும் விஷயங்களை யெல்லாம் தெரிந்து கொண்டு வருகின்றேன். நீங்கள் யாவரும் சீக்கிரமே பிரயாணப் படுங்கள்.

சயிந்தை:—தாங்கள் கூறுவதே மிகவும் தக்கது. நீவிர் இவ்விடமே யிருந்து என் நாதரைச் சீக்கிரமே அழைத்து வந்து என்னுடன் சேர்த்து வைத்தல் வேண்டும் நீரே எனக்குத்தாய் தந்தை, அண்ணல், தம்பி, சுற்றம். எல்லாம் நீரே திக்கற்ற வென்னைத் தங்கள் தங்கையைப் போல் பாவித்து யான் படுந்துயரத்தைத் தஞ் சிந்தையிலிருத்தி என் நாயகர்க்கு ஏது கெடுதியும் வாரா வண்ணம் உடனிருந்து காப்பாற்றிச் சீக்கிரமே என்னிடம் ஒப்புவித்தல் வேண்டும்.

பதுமுகன்:—நான் இங்கு வந்து வெகு நேரம் ஆய்விட்டது. என் நண்பன் அப்பாதகர் தம்கையினின்று விடுபட்டிருந்தால் இவ்விடம் எப்படியும் வந்திருப்பன். அவனுக்கு ஏதோ கேடிழைக்க வெண்ணுகின்றனர் போலும்., நான் செல்வதற்கு விடை கொடுப்பீராக.

சயிந்தை:—சீக்கிரம் சென்று என்னுதரோடு வருதல்வேண்டும். (பதுமுகன் போய்விடுதல்)

வைரமணி:—குணசுந்தரி! சயிந்தா! நாம் இனி தாமதிப்பதாகாது புறப்படுங்கள் போவோம். (யாவரும் போதல்)

மயான களம்

மயான ருத்திரிகோவில். மதனன் ஓர் புறமும் மற்றிரு வீரர்கள் மறுபுறமும், சீவோதயன் மத்தியிலுமாய் நடந்து ருத்திரி கோவில் முன் வந்து நிற்றல்.

பைரவன்:—அப்பா! தம்பி! இப்படி வந்து நில்லு.

பீமன்:—அடே தடியா! பைரவா! அம்மா எதிரே நிறுத்தடா. ராஜா உத்திரவு அப்படி தாண்டா.

பைரவன்:—நீ ரொம்போ தெரிஞ்ச வண்டா. அப்படிதா நிக்க சொன்னே. (நிறுத்துதல் - சீவோதயன் மெய்மறந்து நிற்றல்.]

மதனன்:—சீவோதய! நான் உன்னை அழைத்துவந்த காரணம் என்ன தெரியுமா. இதோ பார் என் மாதுலர் நினக்கு விதித்த தண்டம் [ஓர் ஓலையை நீட்டுதல்].

சீவோதயன்:—[வாசித்துப் பார்த்து முகத்தை முடுக்குடன் திருப்புதல்] நான் குரவர்க்கிட்ட ஆணைக்குத் தானஞ்சுகின்



றேன். இன்னும் பதினைந்து நாட்களிருக்கின்றன. தலைக்கு மீது வெள்ளம் புரண்டு வந்த பின்னரும் யோசிப்பானேன். நல்லது இப் பிறப்பில் என் னெண்ணம் முடியா விடினும், மற்றோர் பிறப்புற்றுப் பழிக்குப் பழிவாங்குகின்றேன். நன்று, நன்று; கட்டளைப்படி செய்யுங்கள். [இரண்டு கைகளையும் சிரமேற் குவித்துக் கண்களை மூடிக் கொண்டு கடவுளைத் தோத்திரித்தல்.

அஞ்சலென்ற காதலமுங் கணபணமும்
அரைக் கிசைந்த புலியுடையும் புலிச் செஞ்சடையும்
கஞ்சமலர்ச் சேவடியுங் கணைக்கழலுஞ் சிலம்பும்
கருணை பொழி திருமுகமுங் கண்களொரு மூன்றும்
நஞ் சையுண்ட மணிமிட றுமுந்நூலு மார்பும்
நலந் திகழ் வெண்ணீற்றொளியு மறியானு மழுவும்
பஞ்சடிச் சிற்றிடையு மையாளொப்ப னைப்பாகமுமாய்ப்
பால் வண்ண ருளத்திருக்கப் பயமுண்டோ வெனக்கே.

மதனன் வெட்டுதற்கு வாளை உருவுதலும் திடீரென்று ஓர் இடி உண்டாதல். மதனன் பயந்து வாளை எறிந்து ஓடி விடுதல், பைரவனும், பீமனும், சீவோதயனை விட்டு விட்டு ஓடிப்போய் விடுதல். சீவோதயன் சிறிது நேரம் பிரமையுற்று நின்று பின்னர் விழித்துப் பார்த்தலும், யாவரையும் காணாது, தரித்த தளையை முறித்தெறிந்து விட்டு ஓடிப்போய் விடுதல்.

---

## திண்ணைப் பள்ளிகள் திரும்பவும் வேண்டும்.

---

1. இத் தென் தமிழ் நாட்டின்கண் 100-க்கு 91 விதம் உள்ள எழுத்தறியாமையை நாம் ஒழிக்கவேண்டுமெனின் சுமார் 3000 வருடங்களுக்கு முன் மேல் நாடுகளுக்கு நாம் வழிகாட்டியாய் இருந்த காலத்தில் கையாண்ட கல்வி முறையை நடை முறையில் நாம் கொண்டுவரவேண்டும். அதாவது திண்ணைப் பள்ளிக்கூடங்களில் பாலராகப் படித்து அறிந்துகொண்டு வாலிபத்தில் தந்தையின் தொழிலில் துணை செய்து குடும்பத்தைக் காத்து பின் முதியவனானதும் தனக்கு வேண்டிய கல்வி, இலக்கிய இலக்கண நீதி நூல் வைத்திய முதலியவற்றை ஒரு ஆசிரியரிடத்தோ அல்லது ஒரு கல்விக் கழகத்திலேயோ கற்பது, தம் வாழ்நாள் முழுதும் ஓதுவது ஒழியாத

கடமை பூண்ட அந்தணர் ஆதிசைவர் ஒழிந்த மற்றைய சாதியார்க்குப் பழக்கமாக இருந்ததென சங்க நூல்கள் விளக்கும்.

2. இத் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் திரும்பி வந்தால் தான் 100-க்கு 90 விதம் கிராமங்களில் வாழும் இந்திய மக்களிடம் எழுத்தறியாமை ஒழியும். முதியோர் முன்போல் மறுபடியும் கல்விகற்க எழுந்தால்தான் சர்வ ஜனங்களிடமும் உயர்தரக் கல்வி அமையக் கூடும்.

3. நமது தாலூக்கா ஜனநாயக ஆட்சிக்குட்பட்ட பிரதம பாடசாலைகளினின்றும் நாமகள் உறக்கம் ஒழிந்து விழிக்கவும் கூடுமோ? அன்பர்காள், ஆழ்ந்து நோக்குங்கள்? வேண்டியதை இடசித்தத்துடன் விரும்புங்கள்! ஓயாது பெரு முயற்சி செய்யுங்கள்.

4. இவ்விதத் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் அமையுமானால் பாரதியார் பாட்டின்படி வீதிதோறும் இரண்டொரு பள்ளியும் நாடு முற்றிலும் பலபல பள்ளி அதிக செலவின்றியும் கிராம வாசிகளின் நேர் விசாரணையிலும் அதனால் ஒழுங்காகவும் நடைபெறும். மாணவர்கள் கொடுக்கும் தானியப் பணக் கட்டணங்களுடன் அரசியலார் பிள்ளைகள் தேர்ச்சி அடைவதற்குத்தக்கபடி பண உதவியும் செய்தால் அது போதுமான ஆதரவாகும்.

5. இவ்வுபாத்தியாயர்களுக்கு ஒரு பயிற்சி கொடுப்பது இயலாதது மாத்திரமன்றி, அவர்களை ஒரு கட்டுக் குட்படுத்தி சக்தியையும் அழித்துவிடும். அவர்கள் எவ்விதம் நடக்கவேண்டுமென சில வருஷங்களுக்கு நேரில் சொல்லிக் காட்டி திருந்ாதவர்களை நீக்கிவிடுவதே போதுமான தடையாகும்.

6. பல திண்ணைப்பள்ளிக்கூடத்திற்கு நடுவில் சரியாகக் கவனிக்கப்படக் கூடிய சில தாலூக்கா சுய ஆட்சி சபைப் பிரதமப் பள்ளிக்கூடங்களை அமைத்தால் ஒருவாறு அதிகப்படிப்பும் கிராம இளைஞர்கள் இளமையிலேயே கற்கக்கூடும். இவ்வித ஆலோசனை கல்வி இலாக்காவிலும் ஆதரவு பெற்று வருகிறது. நம்மவர் நோக்கும் முயற்சியுமே குறைவாக இருக்கிறது.

7. கிராம மக்கள் ஊக்கங்கொண்டு உழைத்தால் தான் நமது சட்டசபை உறுப்பினர்போன்ற பெரியார்கள் "காப்பன காத்து கடிவன கடியும்" சட்டங்களை நிறுவ வல்லவராவர்.

— சு. வி. கனகசபைப் பிள்ளை

## சென்னை ராஜதானியில் கல்வி அபிவிருத்தி

3. இனி நமது சென்னை ராஜதானியில் சர்க்கார் கல்வி இலாகா ஆதரவில் பள்ளிக்கூடங்கள் நடைபெற்று கல்வி எவ்வளவு அதிகமாயிருக்கிறது என்பதை ஆராய்வோம்.—

ஜனக் கணக்குகளை கவனிப்போமாகில் எழுதப் படிக்கத் தெரியாதவர்களின் தொகை தெரிந்தவர்களின் தொகையைவிட வருஷா வருஷம் அதிகரித்துக்கொண்டே வருகிறதாகப் பார்க்கிறோம். [இது எஸ். ஜி. டானியல் அவர்கள் வாக்கு).

| வருஷம். | ஜனத்தொகை. | எழுதப்படிக்கத் தெரிந்தவர். | தெரியாதவர். |
|---|---|---|---|
| 1901 | 3,86,53,558 | 24,36,743 | 3,62,16,815 |
| 1911 | 4,18,70,160 | 31,30,250 | 3,87,39,910 |
| 1921 | 4,27,94,155 | 36,67,737 | 3,91,26,418 |
| 1931 | 4,71,93,602 | 43,67,545 | 4,28,26,057 |

எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் 1901-ல் நூற்றுக்கு 6 3; 911-ல் 7.5; 1921ல் 8.5; 1931ல் 9·3.

கீழ்தரக் கல்விக்கென்று எத்தனையோ பேர் எவ்வளவோ முயற்சி எடுத்தபோதிலும், கடந்த 30 வருஷங்களுக்குள் நமது இராஜதானியில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் தொகை 19,30,802 அதிகரித்திருக்க, தெரியாதவர்களின் தொகையோ 66,09,242 அதிகரித்திருக்கிறது. அதுவுமன்றி வருஷத்துக்கு சுமார் 1000-க்கு 1தான் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் வரிசையில் வந்து சேர்வதாக தெரிகிறது. ஆனால் ஜனத் தொகையோ 1000-க்கு வருஷத்திற்கு 6-அதிகம் ஆகிறது. ஆதலின் படிக்காதவர்கள் 100க்கு 5-பேர்கள் அதிகமாவது ஆச்சரியமல்ல.

4. நமது நாட்டில் கல்வி வளரவேண்டும் என்ற ஆவல் உள்ளவர்கள் எல்லாம் இக்கணக்கை கவனித்துப் பார்ப்பது அவசியம். ஜனத்தொகை வருஷா வருஷம் எவ்வளவு அதிகமாகிறதோ அதைவிட அதிக அளவு கல்வி பரவ முயற்சி செய்யாவிட்டால் இப்போதுள்ள எழுதப் படிக்கத் தெரியாதவர்களின் தொகை குறையாது.

5. பூகோள சாஸ்திரத்தில் எங்கெந்த விஷயங்களை யெல்லாம் சொல்லிக்கொடுக்கிறார்களே, இதை சொல்லிக் கொடுக்காதது என்னே? இதைப் பொது ஜனங்கள் யாவருக்கும் அறிவிக்கவேண்டியது எல்லாருடைய கடமையாகும்.

6. அதிக செலவு இல்லாததும், உள்ளூர் ஜனங்களுக்கும் உபாத்தியாயருக்கும் மாணாக்கர்களுக்கும் சௌகரியமானதுமான திண்ணைப்பள்ளிக்கூடங்கள் திரும்பி வந்தால்தான் எழுதப் படிக்கத் தெரிவதான சிறு கல்வி சீக்கிரம் பரவும்

சு. வி. கனகசபை பிள்ளை
கௌமார குருகுலம்—மன்னார்குடி.

## ஆரோக்கியத் துண்டுத் துணுக்குகள்.

*தயிர்:*—தயிரின் ஆகாரக் குணமானது பாலின் ஆகாரக் குணத்தைப்போலவே இருக்கும். ஏனெனில், பாலைத் தயிராக்குவதில், வேறொரு ஆகாரப்பதார்த்தம் ஒன்றும் சேர்க்கப்படவுமில்லை, அதிலுள்ள ஆகாரப்பதார்த்தம் எதையும் அதிலிருந்து எடுக்கப்படவுமில்லை. ஆகிலும், பால் ஜீரணமாகாதவர்களுக்குத் தயிர் ஒத்துக்கொள்ளுகிறது. இது யாவருக்கும் தெரிந்த விஷயம். இதற்குக் காரணம், தயிரில் லாக்டிக் ஆஸிட் கிருமிகள் நிரம்ப இருப்பதால், அவை ஜீரணமாவதற்கு உதவியாயிருக்கின்றன தயிர் மலச்சிக்கலை உண்டு பண்ணாது. ஆனால், மலத்தைக் கழிக்கும்படியான சூடான பாலிற்கும் இதற்கும் வித்தியாஸம் உண்டு. தயிர் சிலருக்கு ஒத்துக்கொள்ளுகிறதில்லை. முக்கியமாய் சீதள சம்மந்தமுள்ள தேகிகளுக்கு இது சரிப்படுகிறதில்லை. இவர்கள் இரவில் தயிரை எடுத்துக்கொண்டால், வயிற்று உப்பஸமும், வயிற்றில் வாயுவும் உண்டாகும். ஆனால், சீதள தேகிகள் தவிர, மற்ற பேர்களெல்லாம் தக்க ஆகாரத்துடன் கலந்து, பகலில் தயிரை உபயோகித்துக்கொண்டால், அதனால் நன்மை உண்டாகும்.

* * * *

*தேங்காய் ஜலத்தில் ஜீவஸத்துப் பொருள்.*—உஷ்ணப் பிரதேசங்களில் கோடை காலத்தில் தேங்காய் ஜலத்தை அதிகமாக ஜனங்கள் குடிக்கிறார்கள். இந்தியாவில் இம்மாதிரி நடக்கிறது. டாக்டர் அக்ஸ்டு மேயர் என்பவர், தேங்காய் ஜலத்தைப் பரிசோதித்துப் பார்த்து, அதைக் குறித்துப் பின்வருமாறு சொல்லுகிறார்:—'தேங்காய் ஜலத்தினால், மூத்திரம் அதிகமாக இறங்குகிறதென்றால்; அதற்குச் சாஸ்திரப்படி ருஜு ஒன்றும் காணோம். இதில் உள்ள பி. 1, பி 2· ஜீவஸத்துப் பொருள்களைக் குறித்து நீடித்த ஆராய்ச்சி செய்து, அதன்படி தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. அதன்படி, முற்றின தேங்காய் ஜலத்தில் பி. 1, கம்மியாகவும், பி. 2. அதிகமாகவும் இருக்கிறதாக ஏற்பட்டிருக்கிறது. இந்த தேசத்தில், இளநீரைத்தான் அதிகமாகக் குடிக்கிறார்கள் இதில் பி. 1. ஜீவஸத்துப் பொருள் அதிகம் இருப்பதாக ஏற்படுகிறது.—

* * * *

*நிலா:*—சூரியனைப்போல் சந்திரனுக்கு கிரணங்கள் இல்லை. சூரிய கிரணங்கள் சந்திரன் மேலே படுவதால், அது பிரதிபிம்பித்து நமக்கு நிலா வெளிச்சம் உண்டாகிறது. சூரியனின் உஷ்ணக் கிரணங்கள், ரஸாயன கிரணங்கள் யாவும் சந்திரனால் கிரஹிக்கப்படுகின்றன. அதில், சில கிரணங்கள் மட்டும் நமக்குப் பிரதிபிம்பிக்கிறபடியால், இந்தச் சந்திர கிரணங்களால் தேகத்தொழில்களுக்கு யாதொரு அனுகூலமும் இல்லை என்று ஏற்படுகிறது.—

# தஞ்சை ஜில்லா
# ஆசிரியர் மானேஜர்கள் மகாநாடு

---

### வரவேற்புப் பிரசங்கம்
### வேதாரண்யம்.

ஜனவரி மாதம் 6-ந்தேதியும், 7-ந்தேதியும் தஞ்சை ஜில்லா ஆசிரிய மானேஜர்கள் மகா நாடு வேதாரண்யத்தில் நடைபெற்றது. மகாநாட்டுத் தலைவரான ஸ்ரீமான் எ. பி. எல். என். வி. நாடிமுத்துப் பிள்ளை ஸ்டேஷனிலிருந்து ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார் ஸ்ரீமான்கள் டி. ஈ. வரதாச் சாரியார், பி. வீரராகவலு, சேஷாசலம் செட்டியார் ஆகியோருட்படப் பல பிரபலஸ்தர்கள் மகா நாட்டிற்கு விஜயம் செய்திருந்தனர். ஜில்லா போர்டு மெம்பரான ஸ்ரீமான் என். நாராயணையங்கார் மகா நாட்டைத் திறந்து வைத்தார்.

வரவேற்புக் கமிட்டித் தலைவரான ஸ்ரீமான் கே. ரங்கசாமி அய்யங்கார் நிகழ்த்திய பிரசங்கத்தின் சுருக்கம் வருமாறு:—

தஞ்சாவூர் ஜில்லாவின் நான்காவது ஆசிரிய மானேஜர் கான்பரென்ஸாகிய இதற்கு வரவேற்புக் கமிட்டியின் சார்பாக நான் உங்களுக்கு மிகவும் சந்தோஷத்துடன் நல்வரவு கூறுகிறேன். இந்தச் சிறிய பட்டணமாகிய வேதாரண்யமானது கண்ணைக் கவரக் கூடிய காட்சிகளெதற்கும் பெயர் போனதாயிராவிட்டாலும் இந்த ஊரின் புராதன பிரஸித்தியை நினைத்தாவது உங்களுக்குச் செய்யவேண்டிய ஆதித்யத்தில் எவ்விதக் குறைவும் ஏற்படாதென்று நான் நம்பி இந்த ஊருக்கு உங்களை வரவேற்கிறேன்.

இந்தியாவானது ராஜீய விஷயங்களில் மிகவும் வேகமாக முன்னேறிக் கொண்டு போகின்றது. வெகு சீக்கிரத்தில் ஜனநாயக ஆட்சி அதி வேகமாய்ப் பரவுவதைக் காண்போம். ஜனநாயக ஆட்சியின் முக்கிய அம்சம் என்னவென்றால், அது ஜனங்களில் சம்மதத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கின்றதென்பதும் பெரும்பான்மையோரின் அபிப்பிராயத்தின்படி அது நடக்கிறதென்பதும், அவர்களின் இஷ்டப்படி நடத்தப்படுகிறதென்பதும் தேசீய வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் சாமான்னிய சுகத்தை அதிகரிக்கச்செய்து மனிதர்கள் ஒருவருக்கொருவர் நீதியுடனும், கட்டாயம் இல்லாமலும் நடந்து கொள்வதை உறுதிப்படுத்துவதுமே யாகும்.

உங்கள் சார்பில் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அதாவது நாம் அதிகச் சம்பளம் வேண்டுமென்று மட்டும் கூச்சல் போடுகிறவர்களல்ல. நாம் பிற்காலத்திய பிரஜைகளை உண்டாக்குபவர்கள் என்பது நமக்குத் தெரியும். அநேக வருஷங்களாக வித்தியாப்பியாசம் சம்மந்தமான வேலையில் நாம் அநுபவ முடையவர்கள். ஆகவே, அது எவ்வளவு முக்கியமென்றும், அதிலுள்ள கஷ்டங்களும் நமக்குத்தெரியும். உத்தியோகஸ்தர்கள் மனம்போனபடி செய்யும் பற்பல ஏற்பாடுகளிலும் உள்ள தவறுகளை நியாயமாகவும், படபடப்பின்றியும் எடுத்துக்காட்ட நமக்கு யோக்கியதை யுண்டு.

மனச்சாட்சிக்கு விரோதமில்லாமலும் விடாமுயற்சியுடனும் நாம் செய்த வேலை நமக்குப் பின்னால் இருக்கிறது. அது நமக்கு ஒரு பெருமையே. ஆரம்பக் கல்வி சம்மந்தமாய் இருக்கும் முன்னேற்றம் முக்கியமாய் கவர்ன்மெண்டு உதவி பெற்ற பள்ளிக்கூடங்களின் ஆசிரியமானேஜர்களாகிய நம்மாலேயே ஏற்பட்டது. கவர்ன்மெண்டாலும் லோகல் போர்டாலும் நேரில் நிர்வகிக்கப்பட்ட பள்ளிக்கூடங்களைப்பற்றி நான் ஒன்றும் தூஷணமாய்ச் சொல்லவில்லை. ஆனால், படிப்பு சம்மந்தப்பட்ட வரையில் அவை கவர்ன்மெண்டு உதவி பெற்றுவரும் பள்ளிக் கூடங்களை விடச் சிறந்தவையாயிரா விட்டாலும் அவைகள் செலவு மட்டும் அதிகமாகவேயிருக்கிறது.

நம் நிலைமையானது மாண்டேகு சீர்திருத்தத்திற்குப் பிறகு இருப்பதை விட அதற்கு முன் மிகவும் நன்றாயிருந்தது. ஆயினும் இப்படி நம் நிலைமை கெட்டுப்போனது அந்தச் சீர்திருத்தத்தினலல்ல. நாம் அதற்குத் தயாராயிராமலிருந்ததுமே காரணம். மாண்டேகு சீர்திருத்தம் அமுலுக்கு வருவதற்கு முன் நாம் ஸிவில் ஸெர்விஸ் உத்தியோகஸ்தர்களின் பாதுகாப்பிலிருந்தோம். இப்பொழுதோ ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட நிரூபண சபைப் பிரதிநிதிகள் மூலமாய் ஜனங்களுக்கு ஜவாப்தாரிகளாகி யிருப்பதாய்ச் சொல்லப்படும் மந்திரிகளின் கீழிருக்கிறோம்.. இவர்களும் புதிது புதிதாய்ப் பரீக்ஷை செய்து வருவதால், நமக்கேற்படும் கஷ்டங்கள் அநேகம். இப்படி இவர்கள் பரீக்ஷை செய்வதால் கல்வி யபிவிருத்தி யானது பரவவில்லை. ·இதுமாத்திரமன்றி அதற்கு ஒரு முட்டுக் கட்டையும் போட்டு விட்டது. முதலில் கட்டாயமான இலவச ஆரம்பக் கல்வி, பிறகு (இலவச மில்லாத கட்டாயமான ஆரம்பக் கல்வி ஆகிய இவை அவர்கள் செய்த பரீக்ஷைகளில் சில. இதனால் விசேஷக் கெடுதல்கள்



உண்டாயிருக்கின்றன. நமக்கு இதனால் அதிகத் தீங்கு ஏற்பட்ட போதிலும் நாம் தான் ஆரம்பக் கல்வி விஷயத்தில் முதல் ஸ்தானத்தை வகிக்கிறோம். 1931-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31-ந் தேதி இருந்த மொத்தம் 50121 ஆரம்பப் பள்ளிக் கூடங்களில் கவர்ன்மெண்ட் உதவி பெற்றவை 30600. மொத்தம் 26 லக்ஷம் மாணாக்கர்களில் 14 லக்ஷம் வரையில் உதவிபெற்ற பள்ளிக்கூடங்களில் படித்தார்கள்.

நம் ஜில்லாவைப்பற்றிப் பேசுவோமானால் 723 பள்ளிக் கூடங்கள் உபாத்தியாயர்—மானேஜர்களுடைய நிர்வாகத்திலிருந்தன. அவைகளுள் 403 பள்ளிக் கூடங்களுக்கு வேலை நன்றாய்ச் செய்ததற்காக விசேஷ கிராண்ட் கொடுக்கப்பட்டு மிருக்கிறது.

சமீபத்தில், ஆரம்பக் கல்வியின் அபிவிருத்தி குறைந்திருப்பதற்குக் காரணம் தற்காலத்தில் நாம் மூன்று வகை அதிகாரிகளுக்குட்பட்டிருப்பதே என்பது என் உறுதியான அபிப்பிராயம். இவர்கள் யாரென்றால், (1) கல்வி இலாகா மந்திரி, (2] டைரெக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷனும் அவருடைய சிப்பந்திகளும் மெதுவாக வேனும் நல்ல வேலை செய்திருக்கிறார்கள். இன்ஸ்பெக்டர் வகையராக்களும் விசேஷமாகத் தரிப்பு வேலை செய்து வந்திருக்கிறார்கள். ஆனால் இது அநேக சந்தர்ப்பங்களில் அதிக தீங்கு உண்டாக்கியிருக்கிறது. 1931-32-ம் வருஷத்தில் கவர்ன்மெண்ட் உதவி பெற்றுவந்த 30600 பள்ளிக் கூடங்களில் 3356 வரையில் மூடப்பட்டு விட்டன. இவைகளைச் சீர்திருத்தவகையில்லையா என்று நமக்குத் தெரியவேண்டும். சகலருக்கும் ஆரம்பக்கல்வி கொடுக்கவேண்டும் என்பது லக்ஷியமாயிருக்க, சேர்ந்திருக்கும் பள்ளிக்கூடங்களைத் திருத்த முடியாதபடி கெட்டுப்போயிந்தாலன்றி மற்றப்படி திருத்த முயல்வதே நியாயமான வழியாகும் ஒரு பள்ளிக் கூடத்தை மூடுவதற்குமுன் அதைப் பற்றிப் பூர்த்தியாய் விசாரணை செய்திருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இன்ஸ்பெக்டிங் ஆபீஸர்கள் இருப்பதை இருப்பதை அழிப்பதில் சாமர்த்தியமுள்ள கூட்டமென்றாவது அவர்களுக்கு ஆரம்பக் கல்வி ஆசையில்லை என்றாவது சர்க்கார் உதவி பெற்ற ஆரம்பப் பள்ளிக்கூட மானேஜர்களான நம்மை அடியோடு ஒழிக்க அவர்கள் வந்திருக்கிறார்கள் என்றாவது நான் சொல்லவில்லை. ஆனால், அவர்கள் செய்யும் வேலையில் கொஞ்சம் பொறுமையுடனும், யுக்தியுடனும் நடந்து கொள்ளவேண்டும் ஜில்லா கல்விச் சபைகள் முன்னேக்கம்

உள்ளவையாயும் சுதந்திரம் உள்ளவையாயும் இருக்கவேண்டும். அப்படி இல்லாததற்குப் புதிதாய் உள்ள எதற்கும் இயற்கையாயுள்ள பயம் காரணமே யொழிய கவர்ன்மெண்டு டைரெக்டர் ஆகிய இவர்களின் கடுமையான மேற்பார்வையல்ல. சர்வ வியாபகரான ஜில்லா கலெக்டருக்கு கல்வி விஷயத்தில் செலவிட நேரமில்லை. ஸ்தலஸ்தாபனங்களின் பிரதிநிதிகளோ ஏறக்குறைய ராஜ தந்திரிகள். அல்லது தங்கள் சொந்த நன்மையை உத்தேசித்து சில ஏற்பாடுகளுடன் வந்தவர்கள். ஆகவே, அவர்கள் ஏதாவது ஒரு நபர் அல்லது கக்ஷியை திருப்தி செய்வதற்காக கல்வி விஷயத்தை தொங்கலில் விடும்படி கட்டாயப்படுத்தப்பட்டால் அவர்கள் அப்படி செய்பவர்கள். இன்ஸ்பெக்டர் முதலான உத்தியோகஸ்தர்கள் உத்தியோக தோரணையில் கவுன்ஸில் மெம்பர்களானபடியால், சாதாரணமாக அதிக செல்வாக்குள்ளவர்களாயும் கவுன்ஸில்களை தங்கள் இஷ்டப்படி ஆட்டிவைக்கும் சக்தியுள்ளவர்களாயும் இருக்கிறார்கள் கவர்ன்மெண்ட் உதவி பெறும் ஏஜென்ஸிகளின் பிரதிநிதிகளாகிய இதர கவுன்ஸில் மெம்பர்கள் மரியாதை உள்ள விண்ணப்ப தார்களாயிருக்கிறார்கள். இவர்களுக்கு கிடைப்பதெல்லாம் கலெக்டர், இன்ஸ்பெக்டர், முதலான உத்தியோகஸ்தர்கள், லோகல் போர்டு பிரசிடெண்டுகள் இவர்களுடைய பேட்டிதான். இதிலேயே இவர்கள் திருப்தியடைந்து விடுகிறார்கள். ஆசிரியர் மானேஜர்களின் பிரதி நிதிகள் இன்னும் அதிகமாய் இருக்க வேண்டியது நியாயம்.

ஜில்லா கல்வி சபைகள் இன்னும் நன்றாய் வேலை செய்யத்தக்கதாய் இருக்கும் பொருட்டு வித்யாப்யாஸத்தில் உண்மையாக ஈடுபட்டு இருப்பவர்களின் பிரதி நிதிகள் இன்னும் அதிகமாய் இருக்கவேண்டியது நியாயம்.

ஜில்லா கல்வி சபைகள் இன்னும் நன்றாய் வேலை செய்யத்தக்கதாய் இருக்கும் பொருட்டு வித்யாப்யாஸத்தில் உண்மையாக ஈடுபட்டு இருப்பவர்களின் பிரதி நிதிகளை அதிகப்படுத்த வேண்டியது அவசியம்.

## கட்டாயக் கல்வி

கட்டாயக் கல்வியானது முதலில் இலவசமாயிருந்தபோதும், அதன் பிறகு இலவசமாயிராதிருக்கும்போதும், அதன் பயன் என்னவென்று நமக்கு நன்றாய்த் தெரியும். இது இலவசமாய் இருந்தபோது, நாம் பிள்ளைகளிடம் சம்பளம் வாங்கக்கூடவில்லை; அதனால்



நமக்கு ஏற்பட்ட நஷ்டத்துக்கு ஈடு கொடுக்கப்பட்டது. இலவசக் கல்வி சம்மந்தமாய்ச் செய்த பரீக்ஷையினால், ஸ்தல ஸ்தாபனங்கள், முனிசிபாலிட்டிகள் இவைகளுக்குச் செலவு அதிகரிக்கவே, அவர்கள் அதைக் கைவிடும்படி நேர்ந்தது. அவர்களைக் காப்பாற்ற கல்வி இலாகா மந்திரியானவர் இலவசக் கல்விச் சட்டத்தை திருத்த ஒரு மசோதா கொண்டுவந்தார். இந்த மசோதா சட்டமானது முதல், கட்டாயப்படிப்பு மிகவும் மெதுவாகவே அபிவிருத்தியாய் வந்திருக்கிறது. வருஷந் தவறாமல் பிரயோஜனமற்ற பரீக்ஷை செய்வதே இதனால் ஏற்பட்ட பயனாகும். ஒரு பரிஹாஸக் கூத்தாகவே அனுபவத்தில் நாம் கண்டறிந்தோம். சாமர்த்யக் குறைவை நிவர்த்திக்கவும், பணம் வீணாய்ச் செலவாவதை நிறுத்தவும் "சாம்பியன் ஏற்பாடு" என்று சொல்லப்படும் ஒரு ஏற்பாடு வரப்போகிறது. அதன் நோக்கமென்னவென்றால், இப்போதிருக்கும் பள்ளிக்கூடங்களை ஒன்று சேர்ப்பதனால் அவைகளின் சாமர்த்தியத்தை அதிகரிக்கச் செய்வதும் அவைகளினால் ஏற்படும் செலவைச் சுருக்குவதுமாகும். பல வகுப்புகளை வைத்துக்கொண்டு போதிப்பது இயல்பாகவே தவறானது. கெட்டது; ஒவ்வொரு பள்ளிக் கூடத்திலும் உயர்ந்த நிலையுள்ள முஸ்தீப்புகள் இருக்கவேண்டும்; ஒரு உபாத்தியாயருக்குச் சரியாய் வேலை கொடுப்பதற்கு வகுப்பில் 30-க்குக் குறையாத பிள்ளைகள் இருக்கவேண்டும். ஒரு ஜாபிதாவில் கண்ட யோக்யாதாம்சங்கள் உபாத்தியாயர்களுக்கு இருக்க வேண்டும் என்பதே சிறு பிள்ளைகள் ஸம்பந்தப்பட்டவரையில் பல வகுப்புகளை வைத்துக்கொண்டு போதிப்பது அவர்கள் நினைப்பதுபோல் அவ்வளவு கெடுதலானதல்ல. ஒன்று முதல் மூன்று வகுப்புகளில் செய்யப்படும் போதனை வெகு ஸாமான்யமாயும், மெதுவாயும் இருக்கிறபடியால் இது மிகவும் ஸாத்தியமானதே ஆகவே ஓரே உபாத்தியாயர் ஸாமர்த்தியத்துக்கு எவ்விதமான ஹானியுமின்றி மூன்று வகுப்புகளையும் நிர்வகிக்கக்கூடும். ஒரு வகுப்பு எழுதிக்கொண்டிருக்கவும், இன்னொன்று சித்திரம் வரையவும், மூன்றாவது வகுப்பு சம்பாஷணை அல்லது படிப்பில் காலத்தைக் கழிக்கவும் கூடும். பூகோள சாஸ்திரம், தேச சரித்திரம், தாவர சாஸ்திரம் பிராணி சாஸ்திரம், தேசமைப்பு, சுகாதாரம் முதலிய பல விஷயங்களைச் சிறு குழந்தைகளின் மூளையில் திணித்து அதைக் கலங்கச் செய்வதினால் மானுஷ சக்திவியர்த்தமாகின்றதென்பதே. இதற்குப் பதிலாக நன் என் மாணாக்கர்கள் நாளடைவில் தங்க

ளுக்குத் தேவையான விஷயங்களை தாங்களே தெரிந்து கொள்ளத் தக்கவாறு அவர்கள் மனதைப் பழக்கிவிடுவேன். தான்யம் நிறைந்த வயல்களுக்குப், அடர்ந்த காடுகளுக்கும், ஆற்றோரத்திற்கும் ஏரிகள், அல்லது மலையடிவாரத்திலிருக்கும் என்மாணுக்கர்களை அப்போதைக்கப்போது அழைத்துப் போவேன். இதனால் அவர்கள் இயற்கையாயிருந்து தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களைத் தாங்களே தெரிந்து கொள்வார்கள். இந்தியர்கள் தங்களுடைய தேவைகளை அதிகரிப்பது மூலம் அவர்கள் வாழ்க்கையின் நிலைமையை உயர்த்த வேண்டுமென்று அன்னிய தேசத்தார் கொண்டிருக்கும் சாமான்ய விஷயம் ஒரு அம்ஸமாகும்.

இப்பொழுது ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் நியமிக்கப்படும் உபாத்தியாயர்களின் யோக்கியதாம்சங்களைப் பற்றிக் கவனிப்போம். மேற்கூறிய சாம்பியன் ஏற்பாட்டை அந்தந்த பிரதேசங்களில் அனுஷ்டானத்திற்கு கொண்டுவரும் பொறுப்படையவர்கள் அதிகக் கண்டிப்பாய் இருக்கும்படி செய்யக்கூடுமென்று எனக்கு ஒரு பயமிருக்கிறது. நல்ல உபாத்தியாயர்கள் ஜனன விசேஷமே யொழிய உபாத்தியாயர்களை உண்டாக்க முடியாதென்பது என் நம்பிக்கை. உபாத்தியாயராயிருப்பதற்கு அவசியமான புத்தி வைபவமிருக்கவேண்டும். அநேக சந்தர்ப்பங்களில் உபாத்தியாயருக்கு கொடுக்கும் பயிற்சி அவசியமேயில்லை.

இப்பொழு திருக்கும் ட்ரெயினிங் ஸ்கூல்களெல்லாவற்றையும் அவைகளிலுள்ள தட்டுமுட்டு சாமான்கள் புத்தகங்கள் வகையறாவுடன் அடியோடு ஒழித்து விட்டாலும் எனக்கு வருத்தமில்லை. படிப்புள்ள எந்த மனிதனும் உபாத்தியாயர் தொழிலுக்குரிய புத்தி வைபவ மட்டும் உடையவனாயிருப்பான். இந்தத் தொழிலுக்குரிய புத்திவைபவம் மட்டும் இராவிட்டால் அவன் போதனா முறைப் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் தொழிலுக்கு வேண்டிய அநேக விஷயங்கள் பாடம் பண்ணி வெளிவந்தாலும், அவன் நல்ல உபாத்தியாயராகமாட்டான்.

சாமர்த்தியமற்ற பள்ளிக்கூடமாயிருந்தாலும் சமீபத்திலிருக்கும் பள்ளிக் கூடங்களுக்கு பெற்றோர்கள் குழந்தைகளை அனுப்புவார்களே யொழிய வெகு சாமர்த்தியமாய் நடத்தும் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பமாட்டார்கள். ஒவ்வொரு கிராமமும். பிடாகையும் வகுப்பினரும் தங்களுக்கென்றே தனித்தனிதாய் பள்ளிக்கூடங்கள்



வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். கிராமாந்திரங்களில் ஜாதி வேற்றுமையினால் வித்தியாபி விருத்தி தடைபட்டுவருகிறது. ஒரே கிராமத்தில் ஆதித்திராவிடர்களுக்கும், ஜாதி ஹிந்துக்களுக்கும் பிரத்யேகமாயிருந்த இரண்டு பள்ளிக்கூடங்களை தஞ்சாவூர் தாலூக்கா போர்டார் பரீக்ஷார்த்தமாய் மூன்று இடங்களில் ஒன்றாகச் செய்தார்கள். அப்படிச் சேர்த்த சிலநாளுக்கெல்லாம் ஆதித்திராவிடர்கள் எல்லாரும் தங்கள் குழந்தைகளை பள்ளிக்கூட மனுப்பாமல் நிறுத்தி விட்டார்கள். சட்டப்படி இப்பள்ளிக்கூடங்கள் எல்லா ஜாதியினருக்கும் பொதுவாக இருந்தாலும் அனுபவத்தில் பார்த்தால் ஜாதி ஹிந்துக்கள்தான் இவைகளுக்குப் போகிறார்கள். ஆதித்திராவிடர்களுக்கென்றிருந்த தனிப்பள்ளிக் கூடங்களை மூடினதால் இந்த மூன்று கிராமங்களிலும் ஆதித்திராவிடர்களுக்குள் கல்வி நின்று விட்டது.

ஆசிரிய மானேஜர்களாகிய நமக்கு சேம்பியன் ஏற்பாட்டில் எவ்வித விரோதமுமில்லை. அதுமட்டும் ஆரம்பக் கல்வியை வேகமாய் அபிவிருத்தி செய்யக்கூடுமானால் நமக்கு அதனால் ஏற்படும் அசௌகர்யங்களையும் கவனியாமல் கூடுமான வரையில் அதை அமுலுக்கு கொண்டுவரத் தயாராக இருக்கிறோம். ஆனால் நாம் ஸ்தலத்திலிருப்பதினாலும் இரவும் பகலும் நாள் தவறாமல் வித்யாபிவிருத்திக்கே பாடுபடுவதனாலும் மேற்படி ஏற்பாட்டினால் உண்டாகக்கூடிய பலவிதமான கஷ்டங்கள் நமக்கு நன்றாய்த் தெரிகிறது.

என் பிரசங்கத்தை முடிப்பதற்குமுன் கிராண்டின் எய்டு ஏற்பாடு எப்படி அமுலில் இருந்துவருகிறது என்பதைப்பற்றி சுருக்கமாய் சொல்ல விரும்புகிறேன். ஒரு பள்ளிக்கூடம், நன்றாய் நடத்தப்பட்டால் அதிக உதவியும் குறைந்த உதவியும் கொடுக்கப்படும் என்று எண்ணப்படுகிறது. ஒவ்வொரு பள்ளிக்கூடமும் நன்றாய் நடத்தப்படுகிறதா இல்லையா என்பதை நிர்ணயிப்பது இன்ஸ்பெக்டிங் ஆபீஸர்கள். அவர்கள் அபிப்பிராயத்திற்கு அப்பீல் இல்லை சட்டப்படி நியமிக்கப்பட்டிருக்கும் எஜுகேஷனல் கவுன்சிலுக்கு அவர் உத்தரவாதி இல்லை. ஆனால் அவரை நியமித்திருக்கும் டைரக்டருக்கு அவர் உத்தரவாதம் சொல்ல வேண்டியவர். அவருடைய நிர்ணயமும் எப்போதும் பக்ஷபாதமின்றி இருப்பதில்லை. ஒரு பள்ளிக்கூடத்தின் சாமர்த்தியத்தைப்பற்றி அவர் எழுதும் குறிப்புகள் அப்போது அவருக்கிருக்கும் மனப் போக்கை பொருத்திருக்கும். அந்த மனப்போக்கும் அப்போதுள்ள சீதோஷ்ண நிலைமை, அவருடைய குணம்

இவைகளைப் பொருத்திருக்கும், அவருடைய தீர்ப்போ அப்பீலற்றது. மாற்ற முடியாதது. அவரை நியமித்தவர்கள் அவர் ஸ்தல அதிகாரியானபடியால் அவருடைய பேச்சை தேவவாக்காக எண்ணுகிறார்கள். டிஸ்டிரிக்டு எஜுகேஷனல் கவுன்ஸிலுக்கு அவர் உத்தரவாதி அல்லாததினால் அதை அவர் வெகுவாய் அலக்ஷியம் செய்துவிடலாம். அவர் யுக்தானுசாரமாய் நடந்துகொள்ளலாம். என்று அவருக்கு கொடுத்திருக்கும் அதிகாரத்திற்கோ அளவில்லை. அதனால் அவருக்கு முன்னிருந்தவர்கள் தீர்மானித்துவிட்ட விஷயங்களைப் பற்றிய ரிகார்டுகளையும், அவர் வரவழைத்து அதை மாற்றிவிடலாம். அநேக சந்தர்ப்பங்களில் இன்ஸ்பெக்டிங் ஆபீஸ்களில் ஒருவருக்கொருவர் அவ்வளவு நேசப்பான்மை இருப்பதில்லை. ஆகவே கிராண்டு இன் எய்ட் ஏற்பாடு அமுலில் வருவதில் அநேக வித்யாஸங்களும் மாறுபாடுகளும் இருக்கின்றன வென்பது ஆச்சரியமல்ல, இன்ஸ்பெக்டிங் ஆபீஸர்களிடம் அகப்பட்டுக்கொண்டு கஷ்டப்பட்ட பள்ளிக்கூடங்கள் அநேகம் இருக்கின்றன. மேற்சொல்லிய மாறுபாடுகளுக்கும் வித்யாசங்களுக்கும் இடங்கொடுக்கிற அரசியல் முறைபாடம் தான் எங்களுக்கு விரோதம். ஆகவே நிச்சயமான நடவடிக்கைகள் உடைய புத்திசாலித்தனமுடைய ஒரு ஏற்பாடு இப்பொழுதே நமக்கு அவசியம் வேண்டும். அதனால் இன்ஸ்பெக்டிங் ஆபீஸர்கள் செய்யும் வேலையை மேற்பார்வை பார்ப்பதும் அவசியமாயின் அதைத் திருத்துவம் சாத்தியமாகும்.

நம்முடைய தலைவர்கள் சொல்ல வேண்டிய விஷயங்களில் நான் அதிகமாய்த் தலையிடவில்லை என்று நம்புகிறேன். நம்முடைய நிலைமையைப்பற்றி அவர் என்ன சொல்லப் போகிறார் என்று கேட்க நாம் ஆவலுள்ளவர்களாய் இருக்கிறோம் அவருடைய உதவியையும் ஆலோசனையையும் நாம் பயன்படுத்திக் கொள்ள எண்ணுகிறோம். நம்முடைய சங்கம் இதுவரையில் நன்றாய் அமைக்கப்படவில்லை. இனிமேலும் நாம் அசட்டையாய் இருக்க முடியாது. அப்படியிருந்தால் நாம் தோல்வி யடைந்து வித்யாபி விருத்திக்கு நாம் வேலை செய்யப்படாமல் போய்விடும். நம்முடைய பாக்கியத்தை அடியோடு கவிழ்த்து விடக் கூடிய சக்தியை தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கும் சாப்பியன் ஏற்பாடு அமுலுக்குவரும் விஷயத்தில் நாம் விசேஷ ஜாக்கிரதையுடன் இருக்கவேண்டும். ஆகையினால் தான் நம்முடைய பலங்களை ஒன்று கூட்டி நன்றாய் அமைக்க வேண்டுமென்பதும் நமது சக்தியை நாம் எடுத்துக்கொண்டிருக்கும் வித்தியாப்பியாசம் விஷயங்களில் செலுத்த வேண்டுமென்பதும் அவசியமாய் இருக்கிறது.

விழித்துக்கொள்ளுங்கள், எழுந்திருங்கள் நம் நோக்கம் நிறைவேறும் வரையில் நிற்காதீர்கள்.

## ஆசிரியர் கிணற்றுத் தவளைகளா?

பி. பரிமணப்பல்லவராயர்.

அன்பர்களே!

நமது "ஆரம்பக் கல்வி" பத்திரிகையின் முதல் மலரின் முதல் விஷயமாகிய "நமது பத்திரிகை" என்னும் விஷயத்தை இன்னொரு முறை தயவு செய்து படித்துப் பாருங்கள். நம் நாட்டில் ஆரம்பக் கல்வி அபிவிருத்தி ஆவதற்கு நாம்—ஆரம்பாசிரியர்கள் எத்தகையவர்களாயிருத்தல் வேண்டும் என்று கூறி, யிருக்கின்றது? அவ்விதம் ஆசிரியர்கள் (—அனைவருமல்ல—பெரும்பாலார்) இல்லாதிருப்பதினாலேயே நம் நாடு கல்வியில் பின்னடைந்திருக்கின்றதெனின் மிகையாகாது. இதற்குக் காரணம் ஆரம்பாசிரியர் பெறும் ஊதியம் மற்ற நாடுகளைவிட மிகக் குறைவெனலாம். உண்மையே. நம் ஆரம்பாசிரியர்கள் எவற்றில் சிக்கனமாயிருக்கின்றனர்? பொடி போடுவதிலா—சுருட்டு, பீடி, சிகரெட் முதலிய புகை குடிப்பதிலா-வெற்றிலைப் பாக்கு புகையிலை அடக்குவதிலா—மதுபானம் அருந்துவதிலா [வெட்கம்]—காபி அருந்துவதிலா? இவைகளெல்லாம் இல்லாமல் வாழ்க்கை நடக்காதா? இவ்வநாவசியமான செலவுகள் செய்யாதிருக்கின்றார்களா? சங்கத்துக்கு மாதம் அரையணாச் சந்தாவை ஒழுங்காக மாதம் தவறாமல் கொடுக்கின்றார்களா? என்பன ஆகிய இவைகளை யோசித்துப் பாருங்கள்!

தற்போதைய உலகம் பத்திரிகைகளின் மூலம் நடைபெறுகின்றதென்பதை ஆசிரியர் எடுத்துக் காட்டியிருக்கின்றார். ஆரம்பாசிரியர்களுக்காக வெளிவந்து நின்றுபோன பத்திரிகைகள் போக ஆரம்பாசிரியன், போதனா விஷயப் பூங்கொத்து, "ஆரம்பக் கல்வி" ஆகிய இந்தப் பத்திரிகைகளையாவது எத்தனை ஆரம்பாசிரியர்கள் சொந்தத்தில் வரவழைத்துப் படிக்கின்றார்கள்? எத்தனை சங்கங்கள் வரவழைத்துத் தனது அங்கத்தினர்கள்-ஆரம்பாசிரியர்கள் படிக்க உதவுகின்றன? கணக்கெடுத்துப் பாருங்கள்! மிகமிகச் சொற்பமே. வெட்கம் வெட்கம், ஆசிரியர்கள் இவைகளைத் தனித்தனி வரவழைத்துப் படிக்க முடியா விட்டாலும், ஒரு சங்கத்தில் ஒரு வருஷத்துக்கு மூன்று ரூபாய் செலவு செய்து இம் மூன்று பத்திரிகைகளையாவது

வரவழைக்க முடியாதா? எத்தனை சங்கங்கள் வரவழைக்கின்றன?—சிரத்தை யிருக்கின்றது?

ஒரு காலத்தில் தாலுகா போர்டார்களே விவேக போதினி, பிழைக்கும் வழி, தமிழர் நேசன், ஆரம்ப ஆசிரியன் [திருவெறும்பூர்] முதலிய பத்திரிகைகளை வாங்கிச் சங்கங்களுக்கு உதவினர், காரியதரிசிகள் ஆசிரியர்களுக்கு—பாடசாலைகளுக்குச் சர்க்குலேஷன் மூலம் அனுப்பினர். அவற்றில்-அவைகளை எத்தனை ஆசிரியர் படித்திருப்பர்—எத்தனை ஆசிரியர் படிக்காமல் சர்க்குலேஷன் காப்பியில் கையெழுத்து மட்டும் போட்டு அனுப்பியிருப்பர்-காலத்தில் அடுத்த ஆசிரியர்க்கு (பாடசாலைக்கு) அனுப்பாமல் தமது இருப்பிடத்திலேயே வெகு நாள் தூங்கப்போட்டு வைத்த ஆசிரியர் எத்தனைபேர், என்பதைப் பார்த்த எமக்கு, ஆசிரியர்களுக்கு இருக்கும் ஊக்கம், உற்சாகம் இத்தகையதென்பது தெரியும். இதைக் கொண்டே தொழிலிலுள்ள ஆர்வம் இத்தகையதென விளங்கும். இதுவே, இப்போதைய ஆசிரியர்களால் ஆரம்பக் கல்வி அபிவிருத்தியடைய மார்க்கமில்லையெனப் பலரும் சொல்ல முன் வரலாயினர். முன் வராமல் என் செய்வர்? ஆசிரியர்களின் செயல் அவ்விதம் இருக்கின்றது. அதிவீரராம பாண்டியனார் அறிவித்தபடி,

“அச்சமுள்ளடக்கும் அறிவகத்தில்லாக்
கொச்சை மக்களை (—மனிதரை—மாண்புமிகும் ஆசிரியரைப்) பெறுதலின் அக்குடி (அந்நாடு—இந்நாடு)
எச்சமற்று ஏமாந்திருக்கை நன்று” என்றே கூறலாம். தம் தொழிலில் அறிவு மிகுந்த ஊக்கமும் வீரமும் செறிந்த ஆசிரியர் எத்தனை பேர் இருக்கின்றனர்? அதிகாரிகள் அறிவிக்கும் அனைத்துக்கும் அடிமையாக ஆடும் ஆசிரியர்கள் இருக்கும்வரை வீரமேது? அறிவு செறிந்த ஆற்றலேது? ஊக்கமுள்ள உழைப்பேது? உண்மை உழைப்புள்ளவர்—உண்மை வீரமுள்ளவர் உண்மை ஆற்றலுள்ளவர்—உண்மை உணர்ச்சியுள்ளவர் அதிகாரிகள் அறிவிக்கும் எதற்கும் இணங்கார்—இடங் கொடார்!

“பன்றியோடு சேர்ந்த கன்றும் மலந் தின்னும்”
என்பதுபோல, வீரமற்றவர்களோடு சேர்ந்த- ஆற்றலற்றவர்களோடு சேர்ந்த — ஆற்றலற்றவர்களோடு இணங்கிய—தன்மதிப்பற்றவர்களோடு கூடிய ஆசிரிய வீரசிகாமணிகளும் வீரமிழக்கவேண்டி நேரிடுவது ஆற்றலில்லாது இருக்க நேரிடுவது ஆச்சரியமல்ல!



இவ்வளவுக்கும் காரணம் ஆசிரியர்கள் பத்திரிகை உலகைக் கண்கொண்டு நோக்காது—செவி கொண்டு கேட்காது கிணற்றுத் தவளைகளா யிருப்பதே யாகும்.

தற்போது நடக்கும் சங்கங்களிலாவது-மீட்டிங் கன்றுவது பத்திரிகைகளிலுள்ள ஆரம்பக் கல்விக்கான விஷயங்களைப் படித்தாவது காட்டப் பெறுகின்றதா எனின் இல்லையென்றே சங்க நடவடிக்கைகளிலிருந்து தெரிகிறது.

பத்திரிகை படியார் பாமர ராவர்

இத்தரை மீதில் யாது மறியாதார் ஆகவே ஆவர் என்பதை உன்னி இனியேனும் நம் ஆசிரியர் பெருமக்கள் நம் ஆரம்பக் கல்வி போன்ற பத்திரிகைகளைச் சக்திக்கேற்றபடி தனித்தனியாகவாவது, 2—3 பேர் சேர்ந்தாவது, சங்கங்களுக்கு ஒவ்வொன்று விதமாவது அவசியம் வரவழைத்துப் படித்து அறிவும், வீரமும், தன்மதிப்பும் நிறைந்தவர்களாய் விளங்கினாலன்றி, ஆசிரியர்களின் பெயரும் பெருமையடைவதற்கு வழியில்லையென்றே திண்ணமாய்ச் சொல்லலாம். நாடும் நலனுற மார்க்கமில்லையெனலாம்.

உடலிலுள்ள கட்டியை அறுத்துப் பரிகாரம் செய்தாலன்றி அதன் நோய் நீங்காததுபோல, நம்மிடையேயுள்ள கட்டியாகிய குறைகளைச் சொல்லி அகற்ற முன் வந்ததேயன்றி, ஆசிரிய சகோதரர்களை இழிவுபடுத்தும் நோக்கத்தோடு இக்கட்டுரை எழுதப்படவில்லையென்பதை அன்பர்களுக்கு அறிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

---

## போர்ட் பாடசாலைகளில் 55-வயதிற்கு மேற்சென்ற ஆரம்பாசிரியர்களை வீட்டிற்கு அனுப்பிவிட வேண்டுமாம்

தற்போது அரசாங்கத்தார் விடுத்துள்ள ஓர் உத்திரவில் 55 வயதிற்கு கீழ் பட்டுள்ள ஆரம்பாசிரியர்கள் வேலையில்லாமல் திண்டாடுங் காலத்தில் 55 வயது சென்ற ஆசிரியர்களுக்கு திரும்பவும் வேலை கொடுப்பது தகுதியான முறையல்லவென்றும், ஆதலின் அவ்விதம் வயது சென்ற பிறகு திரும்பவும் வேலை பார்க்க மனுக்களை அனுப்பினால் கவனிக்கப்பட மாட்டாதென்றும், மறுபடியும் வேலை கொடுக்க அவ்விதம் மனுக்களை அனுப்புவதாயின் ரிடையர் ஆகும் தேதிக்கு 2-மாதங்களுக்கு முன்பதாக டைரக்டர் துரையவர்கள் மூலம் அரசாங்கத்தாருக்கு அனுப்பப்படவேண்டுமென்றும் தெரிகிறது. [18-1-34]

# நமது சந்தா நேயர்களின் கேள்விகளும் அதற்கு பதில்களும்.

ஜி. ஓ. நெ. 1854 (7-10-33) போதனா முறைப் பயிற்சியில் தேர்ச்சி பெறாத உபாத்தியாயர்களுக்கு கிராண்டு கொடுக்கா வண்ணம் ஒரு திருத்தம் நவம்பர் 7-ம் தேதியில் கெஜட்டில் வெளியாயிற்றே? அதை அரசாங்கத்தார் ஊர்ஜ்ஜிதப் படுத்தி விட்டார்களா? இல்லையேல் அது எம்மட்டில் இருக்கிறது?

கிருஷ்ணசாமி மதுரை.

மேற் குறித்த ஜீ. ஓ. (1854) ஐ கவர்ன்மெண்டார் ஊர்ஜிதப் படுத்தவில்லை. பல சங்கங்களிலிருந்தும், கல்விச் சபைகளிலிருந்தும் பல விதமான எதிர்ப்புகள் வந்திருக்கின்றன. அதனால் அநேகமாக கவர்ன்மெண்டார் அதை ஊர்ஜிதப் படுத்தமாட்டார்களென தெரிகிறது.

2. எங்கள் ஜில்லாவில் கல்வி அதிகாரிகள் (கன்ஸாலிடேஷன்] ஸ்கீமைப்பற்றி வேலை செய்து வருகின்றார்கள்? இவர்கள் படும் பாட்டைப் பார்த்தால் நாளைக்கே இந்த ஸ்கீம் அமுலுக்கு வரும்போலிருக்கிறதே? இந்த ஸ்கீம் அமுலுக்கு வருமா? அது தற்போது எம்மட்டிலிருக்கிறது?

வெங்கடேச ஐயர் சோளபாண்டி.

இந்த ஸ்கீம் அமுலுக்கு வரும், வராது என்ற ஜோஸ்யம் தற்போது சொல்ல நம்மால் இயலாது. ஆனால் இந்த ஸ்கீமுக்கு நமது இராஜதானியில் அதிக ஆதரவும், நன்மதிப்பும் இருப்பதாக தெரியவில்லை. எங்கு பார்த்தாலும் கண்டனக் கூட்டங்களாய் இருக்கின்றது மஹம்மதியர்களும், கேதலிக் பாதிரிமார்களும், பிராடெஸ்டென்ட் சங்கத்தார்களும், ஆசிரிய மானேஜர்களும், மானேஜர்களும், தங்கள் பாடசாலைகளை இணைக்கப்பட கூடாதென்றும் எதிர்த்திருக்கின்றார்கள். கல்வி அதிகாரிகள் பரபரப்புடன் வேலை செய்கிறார்களென்றால், அது அவர்கள் கடமை. மேலாதிகாரிகள் உத்திரவிட்டால் அவர்கள் அதன்படி செய்வது அவர்களது வயிற்றுக் கடமை அவர்களுக்கு இந்த ஸ்கீம் நடந்தால் லாபமென்ன நடக்காவிட்டால் நஷ்டமென்ன? அவர்கள் சம்பளத்தில் யேதாகிலும் குறையப் போகின்றதா. தற்போதிருக்கும் அவஸ்தைகள் போதாதென்று இன்னும் அவதிப்படுபவர்களெல்லாம் ஆசிரியர்களாகிய நாமும், பாடசாலைகளை நடத்தும் மானேஜர்களும் நமது பிள்ளைகளும் தான். எருதின் புண் காக்கை அறியுமா?

இந்த ஸ்கீமை நடத்துபவர்கள் ஆசிரியர்களும், ஆசிரியர் மானேஜர்களும், மானேஜர்களுமே யொழிய கல்வி யதிகாரிகளல்ல. ஆதலின் இவர்களால் இது பரியந்தம் எதிர்த்து எடுத்துக் காட்டியிருக்

# யார்? ஆசிரியர்

(வசுந்தர நைனர் அவர்கள், தலைமை உபாத்தியாயர் கடலாடி)

252-ம் பக்கத் தொடர்ச்சி

உயர் குடிப் பிறப்பும், ஜீவ்காருண்யமும், கடவுள் வழிபாடும், பெருந்தகைமையும், பல நூல்களில் பழகிய தேர்ச்சியும், நூற் பொருளை மாணக்கர் எளிதில் உணரும்படியாக தொகுத்துப் போதிக்கின்ற போதனா சக்தியும், உலக நடையை அறிந்தவராயும், உயர்ந்த குணமுடையவராயு மிருப்பவரே ஆசிரிய ராவர்.

நிலமாட்சி:—

தெரியவரும் பெருமையும், திண்மையும், *பொறையும்,
பருவ முயற்சி யளவிற் பயத்தலும்,
மருவிய நன்னில மாண்பா கும்மே.

பொருள்

1. பூமியை ஓரிடத்திலே இருந்து பார்ப்பதற்கு, அரிய பெருமையும்;
2. தன்மேல் பெரிய பாரத்தை வைத்து, நெருக்கினாலும் கலங்காத வல்லமையும்;
3. தன்னை அடைந்து தோண்டுதல் முதலிய குற்றங்களைச் செய்யினும், பொருத்தலும்;
4. தக்க காலத்திலே உழவர் செய்கின்ற முயற்சிக்குத் தக்கவாறு அவர்கட்கு பயன் கொடுத்துதவலும்;

நல்ல நிலத்தினிடத்து பொருந்திய நற்குணங்களாம்

## ஆசிரியர் நிலத்துக்கு உவமை.

1. பிறரால் வகுத்தறியப் படாத கல்வியின் பெருமையும்.
2. பெரிய வாதம் செய்து தன்மேல் நெறுங்கின வராற் கலங்காத வல்லமையும்;
3. தன்னை யடுத்தவர் இகழ்தல் முதலிய குற்றங்களைச் செய்யினும் பொறுக்கும் பொறுமையும்;

---

கும் காரணங்களை அரசாங்கத்தாரும், டைரக்டர் துரையவர்களும் நன்றாக கவனிப்பார்களானால் இந்த ஸ்கீமை அமுலுக்கு கொண்டுவர இடமில்லை. ஆதலின் கல்வியதிகாரிகளின் பரபரப்பைப் பற்றி நமக்கு விசாரம் வேண்டாம். அவர்கள் வேலையை அவர்கள் செய்யட்டும். இந்த ஸ்கீமைப்பற்றி அநேக டிப்டி இன்ஸ்பெக்டர்களுக்கே சாதகமான அபிப்பிராயம் கிடையாது. அதை எழுத்தால் தங்கள் அபிப்பிராயத்தை மேலதிகாரிகளுக்கு எழுத அவர்களுக்கில்லாத ஸ்வதந்திரத்தைப்பற்றி நாம் மிகவும் வருந்துகின்றோம்.

[15-1-34]

4. மாணாக்கர் செய்யும் முயற்சி யளவிற்குத் தக்க அவரவர்கட்கு பயனைத் தருதலும்;

நல்ல ஆசிரியர்களிட முள்ள குணங்களாம். இதனால் நிலம் உவமை யாகும்.

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல தம்மை,
இகழ்வார் பொறுத்தல் தலை (குறள்)

மலைமாட்சி:—

அளக்கலாகா வளவும் பொருளுந்
துளக்க லாகா நிலையும் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வண்மையும் மலைக்கே.

### பொருள்

1. தன்னை ஒருவர் அளக்க முடியாத பெரிய அளவை உடைத்தாயிருத்தலும்;
2. தன்னிடம் பலவகைப் பொருளை யுடைத்தாயிருத்தலும், எப்படிப்பட்டவராலேயும் அசைக்கப்படாத உருவத்தின் தோற்றமும்;
3. நெடுந்தூரத்திலுள்ளவராலும் காணப்படுகின்ற உயர்ச்சியும்;
4. உலகில் மழை பெய்யாமல் வறண்டு போனாலும் தன்னைச் சேர்ந்தஉயிர்கட்கு நீர்வளத்தைக் கொடுக்கின்ற கொடையும் மலைக்குள்ள நற்குணங்களாம்.

### ஆசிரியர் உவமை.

1. அளவுக்கு காணக்கூடாத கல்வியினளவும், பல நூற் பொருள்களும்;
2. எப்படிப்பட்ட புலமையுடையவராலும் அசைக்கப்படாத கல்வி யறிவின் நிலையும்;
3. நெடுந்தூரத்திலுள்ளவராலும் அறியப்படும் உயர்ச்சியும்;
4. தனக்கு பொருள் வருவதுவறண்டாலும் தன்னைச் சேர்ந்த மாணவர்களுக்கு முகமலர்ச்சியோடு கல்விப்பொருளை கொடுக்கும் கொடையும்; அமைந்தவரே நல்ல ஆசிரியராவர்.

அடுத்த இதழில் மற்றிரண்டு சூத்திரங்களும் வெளிவரும்.

---

## பி. ஏ. பட்டதாரிகளுக்கு

### கிராண்டை அதிகப்படுத்த வேண்டுமாம்.

பி. ஏ. பட்டம் பெற்ற பல மாணவர்கள் வேலையில்லாமல் திரிந்து வருகின்றார்கள். இவர்கள் தங்கள் கிராமங்களுக்குச் சென்று, தங்கள் கிராமத்தையும் கிராமக் கல்வியையும் ஏன் அபிவிருத்தி செய்யக்கூடாது என்பதாக பல பொது ஜனத்தலைவர்களும்,

## "யோக்யதை கெட்ட பிரஸிடெண்டு"

### நகர தூதன் திருச்சி 4—2—34.

"காண்டிராக்டர்களிடமும், சனத்த சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தர்களிடமும் லஞ்சம் வாங்குகிற பிரஸிடெண்டுகளைப்பற்றி ஜனங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். உபாத்தியாயினிகளிடமும் பெண் சிப்பந்திகளிடமும் சூடும் சுரணையும் அற்று ஈனத்தனமாக நடந்துகொள்ளும் பிரஸிடெண்டு—மெம்பர்களைப் பற்றியும் கேள்விப்பட்டிருக்கலாம். ஆனால் வயிற்று ஜீவனத்திற்குக்கூட போதாத சொல்ப சம்பளம் வாங்கும் சிப்பந்திகளை பலவந்தப் படுத்தி காசு பறிக்கும் பிரசிடெண்டைப்பற்றி இப்போதுதான் நாம் கேள்விப்படுகிறோம்.

தான் தலைவராகவோ,—அல்லது ஆரம்ப பாடசாலை உபாத்தியாயர் ஸ்தானங்களின் பிரம்மா—ருத்திரனாகவோ இருக்கிறோமென்கிற ஆணவத்தால் அந்த சிப்பந்திகளை எப்படி வேண்டுமானாலும் நடத்தலாம் என்று நினைக்கும்—அல்லது கிரியாம்ஸையில் நடத்தும் மனித ஜன்மத்தைக் காட்டிலும் கேடுகெட்ட ஜன்மம் வேறு இல்லை என்றே சொல்லுவோம். அழிந்துபோன தன்னுடைய அந்தஸ்தை நிலை நிறுத்திக்கொள்ளுவதற்காக கேவலம் 15—20 ரூ. சம்பளம் பெறும் உபாத்தியாயர்களிடம் பலவந்தத்தின் பேரில் பத்தோ பதினைந்தோ பணம் வாங்கும் காவடிகள் ஒரு போர்டில் உட்கார்ந்திருப்பதைவிட முச்சந்தியில் உட்காரலாமென்பதே நமது அபிப்பிராயம். பாவம் வாயில்லா ஊமைகள் தங்களது சோற்றுப்பை கிழிந்து, போகுமே எனப் பயந்து, ஏதோ பண்ட பாத்திரங்களை அடகு வைத்தாவது கேட்டதைக் கொடுத்துவிட்டு, என்னமோ கனவுகண்ட மாதிரி எவருக்கும் சொல்லாமல் இருந்துவிடுவது இயல்பாயிருப்பதை ஒரு பெரிய தாலூகா போர்டின் உச்ச ஸ்தானத்திலிருக்கும் பேர்வழி தனக்குச் சாதகமாக உபயோகப்படுத்தும் கபோதித் தன்மையை என்னென்று வருணிப்பது?

---

சில படித்தபிரபுக்களும் மேடைப் பிரசங்கங்கள் செய்து வருகின்றார்கள். ஆனால் இப்பொழுது எஸ். எஸ். எல். ஸி. டிரெயின்டு ஆசிரியர்களுக்குத் தான் வருடத்தில் ரூ. 200 கிராண்டு கொடுப்பதாக இருக்கிறது. ஆனால் பி ஏ. படித்தவர்களுக்கென எவ்விதமான கிராண்டையும் (கிரான்ட் இன் எய்ட் கோடில், அரசாங்கம் விதிக்கவில்லை. ஒரு சமயம் பி. ஏ. பட்டதாரிகள் ஆரம்பாசிரியர் தொழிலுக்கு வரமாட்டார்களென்பதாக அரசாங்கத்தார் நினைத்தனர் போலும். இப்பொழுது பி. ஏ. பட்டதாரிகளுக்கு வருடம் கிராண்டு ரூ. 240 கொடுப்பதாக அரசாங்கத்தார் ஏற்படுத்தட்டும் பி. ஏ. பட்டதாரிகளாகிய நாங்கள் இன்றே எங்கள் கிராமங்களில் பாடசாலைகளை ஆரம்பித்து கிராமக் கல்வியை அபிவிருத்தி செய்கின்றோம்.

ஆர். கிருஷ்ணா ராவ்

10-2-34 இண்டியன் எக்ஸ் பிரஸ்

# போட்டி பந்தயங்கள்

1. ஆரம்பக் கல்வியை அபிவிருத்தி செய்யும் வழிகளைப்பற்றி சரியானபடி வியாசம் எழுதி யனுப்புவோர்க்கு முதற் பரிசு. ரூ. 2. இரண்டாம் பரிசு ரூ. 1. அளிக்கப்படும். (வியாசம் டிம்மி அரை காகிதத்தில் நான்கு பக்கங்களுக்கு மேற்படாமலும், பக்கம் ஒன்றுக்கு 25 வரிகளுக்கு அதிகப்படாமலும் இருக்கவேண்டும். ஒரே பக்கத்தில் தான் எழுதவேண்டும். பரிசுபெற்ற வியாசம் அடுத்த மாதத்திய இதழில் வெளிவரும்.

2. ஆரம்பக் கல்வி பத்திரிகையை அதிகமாக ஆதரிக்கும் லெண்டர் சங்கங்களுக்கு ஸ்பெஷல் இனும் கீழ்கண்டவாறு அளிக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 20 சந்தாதாரர்களை உள்ள சங்கங்களுக்கு | | ரூ. | 2. |
| 30 க்கு மேல் | ,, | ரூ. | 3. |
| 40 க்கு மேல் | ,, | ரூ. | 4. |
| 50 க்கு மேல் | ,, | ரூ. | 5. |

ஷை சந்தாதாரர்கள் சேர்ந்த மறுமாதமே அந்தந்த சங்கங்களுக்கு அனுப்பப்படும். அல்லது சங்கக் காரியதரிசிகள் மேற்கண்ட தொகையை எடுத்துக்கொண்டு மீதியை நமக்கு அனுப்பினாலும் சரி.

பத்திராதிபர்.

---

## ஆரம்பப் பாடசாலைகளுக்கு சப்ளிமெண்டல் எய்ட்

ஜி. ஓ. நெ. 2252 (25-11-33)

புதிதாக ஒரு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு சப்ளிமெண்டல் எய்டுக்குச் சேர்க்கப்படவேண்டுமானால் அப்பாடசாலை தேர்ச்சி பெற்ற உபாத்தியாயரால் ஆரம்பிக்கப்படவேண்டும். இல்லையேல் அப்பாடசாலை எய்டுக்கு வரும்பொழுது அப்பாடசாலையில் எல்லா உபாத்தியாயர்களும் போதனா முறையில் தேர்ச்சிபெற்றவர்களாக இருக்க வேண்டும் இந்த ரூல் பாடசாலை வைக்கும் முதல் வருஷத்திற்குத் தான் அனுசரிக்கப்படும். அடுத்த வருஷங்களில் தேர்ச்சி பெறாத உபாத்தியாயர்களை வைக்கப்படின் அவர்களுக்கும். அவரவர் சர்ட்டிபிகேட்டுகளின்படி (ஜி. ஓ. நெ. 1772. (29-9-33] பிரகாரம் கிராண்டுகள் கொடுக்கப்படும்.

# சங்கக் குறிப்புகள்

## ஆசிரிய மானேஜர் சங்கம்.

### பெரிய குளம் ரேஞ்சு

இச் சங்கத்தின் கூட்டம் 28-1-34ந்தேதி தேனி நாடார் ஸ்கூலில் ஸ்ரீமான் வி. வி. வெங்கட்டராமய்யர் அவர்கள் ஸ்கூல் சீனியர் டெப்டி இன்ஸ்பெக்டர் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் 43 அங்கத்தினர்கள் வரை ஆஜராயிருந்தனர். கடவுள் வாழ்த்துக்குப் பின் ஆரம்பக் கல்விப் பத்திரிகையிலிருந்து கல்வியும், மக்களின் கடமையும், பெற்றோர்களின் ஒற்றுமைப்பு என்ற விஷயங்களையும் ஐப்பசி, கார்த்திகை, மார்கழி இதழ்களில் சாராம்சங்களையும் வாசித்துச் சொல்லப்பட்டு, பின் கண்ட தீர்மானங்களும் செய்யப்பட்டன.

போதனா முறை பயிலாத உபாத்தியாயர்களுக்கு கிராண்டு கிடையாதென்று திருத்தப் படப் போவதாக வெளியான ஜி. ஓ. நெ. 1854 (7-10-33) வாசித்து பின் கண்டபடி தீர்மானிக்கப் பட்டது.

எ. மேற்கண்ட ஜி. ஓ. வை திடீரென்று அமுலுக்குக் கொண்டு வருவதால் மிகவும் அதிகமான கஷ்டம் நேரிடுமென்றும்;

பி. போதனா முறை பயிலாத னோயர் கிரேடு உபாத்தியாயர்கள் விஷயமாக ஜி. ஓ. நெ. 1680 [16-9-33)ல் கண்ட மாதிரி இப்போதுள்ள போதனா முறை பயிலாத உபாத்தியாயர்களுக்கு ஒரு தேதி குறிப்பிட்டு (பிரத்தியேக அனுமதி) கொடுக்குமாறும்;

சி. 1940ளுல் இந்த ஜி. ஓவை பூராவும் அமுலுக்குக் கொண்டு வரலாமென்றும் கவர்ன்மெண்டாரை இச் சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது.

1. சுருக்கமான பணத்தில் திறமையாக ஆரம்பக் கல்வியைப் பிள்ளைகளுக்குப் போதிக்கும் விஷயமான அரசாங்க அபிப்பிராயத்தை இச்சங்கம் ஏற்றுக் கொள்வதோடு ஜி ஓ. நெ. 1639 (9-9-33) (கல்வி) திட்டப்படி பாடசாலைகளை இணைத்துப் பரீக்ஷித்து, அதிலுள்ள சாதக பாதகங்களை சீர்தூக்கியறிந்த பிறகு மாகாண முழுதும் அமுல் செய்யலாமென்றும்,

2. அவ்விதம் பரிசீலனை செய்ய ஜில்லா கல்வி அதிகாரி, டிப்டி இன்ஸ்பெக்டர், தாலூகா போர்டு மெம்பர்களில் ஒருவர்—மிஷன் பாடசாலை மானேஜர் ஒருவர், ஆசிரிய மானேஜர் ஒருவராகக் கலந்த கமிட்டி ஒன்றை ஆங்காங்கு நியமிக்க வேண்டுமென்றும்;

3. முதலில் சென்டிரல் ஸ்கூல் ஏற்படுத்தும் இடங்களைக் குறித்து பின் ஒரு அளவுள்ள சுற்றுப்பக்க பாடசாலைகளையும் பிள்ளை

களையும் கணக்கிட்டு, பிள்ளைகள் அதிகமாயிருந்து பாடசாலைகள் போதுமானதாயிருவிடில் புதுப்பாடசாலை ஏற்படுத்தப் பிரயத்தனப் படவேண்டும். பாடசாலைகள் அதிகமிருந்து பிள்ளைகள் குறைந்திருக்கும் பாடசாலைகளை அழித்து விடாமல் எந்த வகுப்புகளை இணைக்க முடியுமோ அவற்றை யோசித்து இணைக்க வேண்டும். அவ்விதம் இணைக்கப்படும் காலங்களில் முதலில் போர்டு பாடசாலைகளைப் போர்டிலும், எய்டெட் பாடசாலைகளை எய்டெடிலும் சேர்க்க வேண்டும். இயலாத சந்தர்ப்பத்தில் போர்டு பாடசாலை வகுப்புகளை எய்டெட் பாடசாலைகளில் சேர்க்க முயல வேண்டும். எப்பொழுதும் செண்டிரல் ஸ்கூல் ஏற்படுத்த எய்டெட் மானேஜ்மெண்டுகளுக்கு முதலில் இடம் கொடுக்கவேண்டும்.

கல்வியிலாகா ஜி. ஓ. நெ. 1680 [16-9-33ல் உத்திரவுப்படி 12-1-32-ல் வேலை பார்த்த யாதொரு சர்டிபிக்கேட்டு மில்லாத ஆசிரியர்களுக்கு அப்பொழுது வேலை பார்த்ததின் அடையாளமாக "சர்வீஸ்" சர்டிபிகேட் கொடுக்கும்படி கல்வி யிலாகா டைரெக்டர், கல்வி மந்திரி அவர்களை இச்சங்கம் கேட்டுக் கொள்கிறது.

5. ரூபாய் 25-க்குள் சங்கத்தின் வருஷாந்திரக் கொண்டாட்டத்தை அடுத்த ஏப்ரல் மாதத்தில் சின்னமனூரில் நடத்தவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. பின்னும் சில சாதாரண விஷயங்கள் தீர்மானிக்கப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது.

காரியதரிசி:—கெ. சங்கரநாராயண பிள்ளை

## ஆசிரிய மானேஜர்கள் சங்கம் சிதம்பரம்
[3-2-34]

திரு. பாலசுப்பிரமணியம் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்று கீழ் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. தற்போது ஏற்பட்டிருக்கும் பாடசாலைகளை இணைக்கும் கன்ஸாலிடேஷன் ஸ்கீம் சேப்பியன் ஸ்கீமிலிருந்து சற்று மாற்றப்பட்டிருப்பினும், காரியத்தில் அந்த ஸ்கீம் நடைபெற பல இடையூறுகள் இருப்பதினால் லோகல் போர்ட் அங்கத்தினர்களும், முனிசிபல் அங்கத்தினர்களும், பொதுமக்களும் கலந்த ஒரு கமிட்டியை ஏற்படுத்தி இந்த புதிய ஸ்கீமை நன்றாக பரிசீலனை செய்து கமிட்டியின் அபிப்பிராயத்தை தெரிவித்த பிறகே இந்த ஸ்கீமை அரசாங்கத்தார் அமுலுக்கு கொண்டுவர ஆலோசிக்க வேண்டுமென்பது.

காரியதரிசி:—எஸ். சாமுவேல் பிள்ளை

## போர்ட் எலிமெண்டரி ஹிந்து பாடசாலை பாரூர்.
மாணவர்க் கழகம்

இச் சங்கம் 26-6-33-ல் ஆரம்பிக்கப்பட்டு இது பரியந்தம், சங்கம், குருபக்தி, கடவுள் பக்தி, அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம், பெரியோர்களிடம் நடக்கும்விதம், நண்பர்களிடம் நடக்கும் விதம், உண்மை, ஒற்றுமை, சகோதரவாஞ்சை, தர்மம், ஜீவகாருண்யம், பரோபகாரம், ஊக்கமது கைவிடேல், ஆறுவது சினம், பொறுமை கூடாது. என்ற தலைப்புகளில் 16 அருமையான உபந்நியாசங்கள் நடந்தேறின.



காரியதரிசி:—வ. கௌர கவுண்டன்

## தலைவாசல் செண்டர் உபாத்திமைச் சங்கம்.
[6-1-34]

ஷை கூட்டத்தில் திரு முகம்மத் ஈசுப் சாயபு அவர்கள் திருஞான சம்பந்தர்" திவ்ய சரித்திரத்தை மிக தெளிவாகவும், அழகாகவும், உபந்நியாசித்தார்.

காரியதரிசி:—முஹம்மது ஹபீப் சாயபு

## தேத்தாகுடி உபாத்திமைச் சங்கம்
(27-1-34)

ஷை கூட்டத்தில் திரு, சின்னு என்பவரால் "உண்மையின் உயர்வு" என்பதைப் பற்றியும், திரு குஞ்சிக் கவுண்டரால் "விருத்த குமாரபாலரான படலம்" என்ற சரித்திரத்தைப்பற்றியும் அருமையான சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன.

காரியதரிசி:—ஆர். தர்மராஜ ஐயர்

## போளூர் தாலூக்கா ஆரம்பாசிரியர் சங்கம்
கடலாடி.

போளூர் ரேஞ்சு கடலாடி செண்டரில், போர்டு ஆண்பாடசாலை கட்டடத்தில், சென்ற மீட்டிங்கில் தீர்மானித்தபடி ஷை சங்கக் கூட்டம் சங்க செக்ரெடரி அக்ராசனத்தின் கீழ் — 27-1-34 பகல் 12-மணிக்கு கூடிற்று.

வியாசம்:—ஒழுக்கம், கடலாடி போர்டு ஆண் பாடசாலை உதவிகள் என். கிருஷ்ணசாமிப்பிள்ளை, எஸ். அப்பா குட்டிப் பிள்ளை இவர்களால் அதிவிரிவாய் பேசப்பட்டன.

தீர்மானங்கள்:—

1. சென்னை வித்தியா இலாகா டைரக்டர் துரையவர்கள் தம்மிடின் நெ. 4807—33. 5-12-33 தேதியுள்ள உத்தரவு இச்சங்கத்துக்கு கிடைத்தபடி இனி சங்கம் கூடும் பொழுது "கடவுள் வணக்கம்" கூறும் வழக்கத்தை நீக்க தீர்மானிக்கப்பட்டது.

2. தற்காலம் எலிமெண்டரி உபாத்தியாயர்களின் சம்பளத்தில் பிடித்திருக்கும் ஒரு பாகத்தை 1934-ம் வருஷ ஜனவரி மாதத்திலிருந்து கொடுக்கும்படி ம-ள-ள-ஸ்ரீ, தாலூகா போர்டார் அவர்களை

வணக்கமாய் கேட்டுக்கொள்ள இந்த ரேஞ்சிலுள்ள எல்லாச் சங்கமும் சில மெம்பர்களைத் தேர்ந்தெடுத்து ஓர் குறிப்பிட்ட தினத்தில் அனுப்ப வேணுமாய் எல்லாச் சங்கங்களையும் இச்சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது.

3. நம் குறைகளை நீக்கிக் கொள்ள சீக்கிரமே ஓர் தாலுகா மஹா நாடு கூட்ட எல்லாச் சங்கமும் முன் வரும்படி தீர்மானிக்கப்பட்டு மாலை 2-மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது.

ஜெந்திர நைனர்
செகரெட்டரி.

## ஆரம்பாசிரியர் சங்கம் திருநெல்வேலி.

இச் சங்கத்தின் முதலாவது மகாநாடானது 1933-ம்௵ டிசம்பர் மாதம் 24-ம் தேதி மாலை 3-மணி முதல் 8-மணிவரை திருநெல்வேலி டவுன் மிஷன் ஹைஸ்கூலில் வைத்து திருநெல்வேலி ஜில்லா கல்வி ஆபீஸர் கனம் கெ அப்பாசாமி அய்யர் பி. ஏ. எல். டி. அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது.

முதலில் கடவுள் வணக்கம் பாடப்பட்டது. பின் கனம் அக்ராசனாதிபதி அவர்கள் முகவுரையாக "உபாத்தியாயர்களின் தேர்ச்சியும் ஆரம்பக் கல்வியின் அபிவிருத்தியும்" முன்னேற்றமடையும் மார்க்கத்தைக் குறித்தும் விரிவாய் பலவிளக்கத்துடன் ஆங்கிலத்தில் எடுத்துக் கூறினார்கள்.

பின் காரியதரிசி டி. எக்ஞுமய்யரால் சங்கத்து வருஷாந்திர ரிப்போர்டும், கடம்பூர் உயர்தர பாடசாலை தலைமை ஆசிரியர் கனம் பஞ்சாபகேசய்யர் அவர்களால் "புது உபாத்தியாயரும் அவரது வேலைகளும்" என்னும் விஷயமாயும், நாங்குனேரி ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் கனம் ஆர். வீரராகவய்யங்கார் அவர்களால் ஆரம்ப பாடசாலையில் போதிக்கும் விதம் என்னும் விஷயமும் தமிழில் விரிவாக பல திருஷ்டாந்தங்களுடன் எடுத்து உபந்நியாசங்கள் செய்யப்பட்டன. பின் சப்ஜெக்ட் கமிட்டியாரால் தயாரிக்கப்பட்ட தீர்மானங்கள் சுமார் 16-வரை, மகா நாட்டால் கவனிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

காரியதரிசி:—டி. ஏ. எக்ஞுமய்யர்.

## கண்டர மாணிக்கம் ஸ்ரீ தண்டாயுதபாணி வித்யாசாலை
## முதலாவது ஆண்டு விழா 20-1-34

முதல் வகுப்பு மாணவர் ஆண்டு விழாவைப்பற்றிய சம்பாஷணையும் இரண்டாவது வகுப்பு மாணவர் பெற்றோர் தெய்வம் என்ற சம்பாஷணையும் சிறுமிகள் கோலாட்டமும் இசைக் கருவி கீதமும் நடத்தினர். (பாரதியாரும் ஆரம்பக்கல்வியும்) என்ற விஷயத்தைப் பற்றி மானாமதுரை சி. வி. சி. ஸ்கூல் டீச்சர் ஸ்ரீமான் சி. விஸ்வநா



தையர் பி. ஏ. எல். டி. அவர்கள் பல குறிப்புகளுடன் இடையிடையே கீதங்களுடனும் ஓர் அரிய உபந்நியாசம் செய்தார். பின்பு எல்லோருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது புகைப்படம் எடுத்த பின்னர் மறுபடியும் கூட்டம் கூடியது.

மூன்றாவது வகுப்பு மாணவர் குருபக்தி என்ற சம்பாஷணையும் 4, 5, வகுப்பு மாணவர் பிரகலாதன் சரித்திரத்தை நாடக ரூபமாய் ட்ரஸ்களுடன் மிகவும் அழகாய் நடித்தனர். திருப்பத்தூர் என். எம். ஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஸ்ரீமான் சுப்பிரமண்ய ஐயரவர்கள் பள்ளிக்கூடம் நடைபெறும் விஷயத்தைப் பற்றியும் சிறிய ஊர்களில் பல பாடசாலைகளிலிருப்பது பிள்ளைகளின் தேர்ச்சிக்கு குறைவு என்றும் அதனால் பெற்றோர்களும் மானேஜர்களும் செய்ய வேண்டியவைகளைப் பற்றியும் விஸ்தாரமாய் எடுத்துக் கூறினர்.

தலைவர் முடிவுரையில் போதனா முறையைப்பற்றி பல அரிய மேற்கோள்களுடனும் பலவிதமான தொழிற் கல்வி மாணவர்கள் பயிலவேண்டிய அவஸ்யத்தைப் பற்றியும் அதனால் தற்காலத்தில் மேன்மை பெற்றிருப்பவர்களையும் உபமானத்துடன் எடுத்துக்காட்டி இந்த ஸ்கூலில் பெண்கள் அதிகம் படிப்பது சந்தோஷிக்கத்தக்கது என்றும், மானேஜரும் ஆசிரியர்களும் சிறத்தையுடன் இருந்து செண்ட்ரல் மாடல் ஸ்கூலாய் மெச்சக் கூடிய நிலைமையில் நடந்து வருவது பற்றியும் ஓர் வாழ்த்துப்பாடி இனிது முடித்தனர்.

காரியதரிசி:—எஸ் ரெங்கநாதய்யர் ஹெட் மாஸ்டர்

## ஆரம்பாசிரியர்கள் சங்கம் திருநெல்வேலி
## 28-1-34

ஷை சங்கத்தின் நிர்வாகக் கூட்டத்தில் கீழ் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

பீஹார் பூகம்ப நிதிக்கு ரூபாய் 5 இச் சங்கம் அனுப்பவேண்டுமென்பது. ஷை நிதிக்கு கிளைச் சங்கங்கள் ரூபாய் 1-க்கு குறையாமல் இச் சங்கத்தின் மூலம் அனுப்ப வேண்டுமென்பது.

தவிரவும் இச் சங்கச் சார்பில் கனம் வைஸ்ராய் பண்டுக்கு பணம் உதவி செய்ய ராமதாஸ் நாடகம் நடத்த தீர்மானிக்கப்பட்டது. அதற்காக ரூ. 100—0—0 சங்கத்திலிருந்து விடுமுதல் செய்ய அனுமதிக்கப்பட்டது.

காரியதரிசி:—டி. ஏ. எக்ஞுமய்யர்.

---

# மதிப்புரைகள்.

மங்கள நாதன் அல்லது மாய மங்கை:—இந்நூல், நமது, அன்பர் பி. பரிமணப் பல்லவராயர் அவர்கள் எழுதிய ஒரு சிறு நவீனமாகும். பொங்கலின் புதுமை யென்ற அழகிய கட்டுரை யொன்றை

யும் இந்நூல் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. இப்புத்தகம் முழுவதும், திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்துள்ளன. இதன் விலை இரண்டணாவாக ஏற்படுத்தி யிருந்தும், நம் ஆசிரியர்களின் பொருட்டே ஓரணா ஸ்டாம்புக்கு அனுப்பி வைப்பதாகக் கம்பெனியார் இசைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இதுவும் திருச்சி, பொன்மலை, ராஜரசம் கம்பெனியாரிடம் கிடைக்கும்.

ராஜரசம்:—பொன்மலை ராஜரசம் கம்பெனியாரிடமிருந்து ராஜரசம் என்ற மருந்துப் பாட்டிலொன்று வரப்பெற்றோம். இந்த ரசம் ஏனைய ரசங்களுக்கெல்லாம் ராஜனைப் போன்றது என்பது இதற்கு நற்சாட்சியளித்துள்ள கனவான்களின் நிரல்பார்க்கும் நமக்கு நன்கு புலனாகிறது. மற்ற ரசங்களை விடக் குறைந்த விலையிலுள்ள இந்த ரசம் ஒரு துளி சாப்பிட்ட அளவிலேயே குணம் நிறைந்ததென்று அறியக் கிடக்கின்றது. இதை முழுதும் உபயோகித்து நமது அநுபவத்தை விரிவாகப் பின்னர் எழுத எண்ணியிருக்கிறோம். இதனை அனுப்பிக் கொடுத்த அக் கம்பெனியாருக்கு நமது வாழ்த்து உரியனவாகட்டும். பாட்டில் விலை 1-8-0 தபாற் கூலி மணியார்டர் கமிஷன் உள்பட ஏழணா ஆகுமென்று அறிவிக்கப்படுகிறது.

பாரத குமாரி:—இப்பெயரையுடைய நூலொன்று நமது பார்வைக்கு மதிப்புரைக்காக வரப்பெற்றோம். இதனாசிரியர் பள்ளுபறையர், இஸ்லாத்தை ஒழிக்க முடிவு என்ற நூல்களின் ஆக்கியோராகிய அன்பர் குலாம் அவர்களாகும். இதற்கு, வெகுகாலமாய் நல்லாசிரியன், சற்குரு என வழங்கிய போராசிரியன், ஆனந்த போதினி, (திருவெறும்பூர்) ஆரம்பாசிரியன் முதலிய பத்திரிகைகள் பலவற்றிலும் ஆரம்பக் கல்வி—ஆரம்ப ஆசிரியர் வளர்ச்சியைப்பற்றி கட்டுரைகள் எழுதி வந்தவரும் ரேஞ்சு, ஜில்லா, மாகாண ஆரம்பாசிரியர் மகாநாடுகளைக் கூட்டுவித்து நடத்தினவரும் ஆகிய திரு. பி. பரிமணப் பல்லவராயர் அவர்கள் அரிய சிறப்புரைக்கு இடந்தந்ததொன்றே இந்நூலின் மதிப்பை நன்குணர்த்துவதாகும்.

இந்நூல் இந்து, முஸ்லீம், கிறிஸ்துவ மதங்களில் பெண்கள் நிலை குறித்துச் செய்யப்பட்ட ஆராய்ச்சிக் களஞ்சியமாகக் பொலிகிறது. பொருள்கள் முழுதும் ஆசிரியர்கள் படித்து அநுபவித்தற்கு அவசியமானது என்பது பெண் சிறுமிகளுக்கும் கல்வி பயிற்றுவிக்கும் நம்மவர்கட்டு எடுத்துக்காட்ட விழைகிறோம்.

டெம்பி 1—8 அளவில் 100-பக்கம் கொண்ட இந்நூலுக்கு விலை எட்டணா என்றிருப்பினும், ஆசிரியர் நலங்கருதியும் நாலணா என்று குறைத்திருப்பது குறிப்பிடுதற்குரிய நற்சமயமாகும். வேண்டுவோர் ஐந்தணா ஸ்டாம்பு அனுப்பி, கீழ்க்கண்ட விலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம். வீ. பி. யில் என்றால் பத்தணா ஆகுமென்று தெரிகிறது. விலாசம்:—ராஜ ரசம் கம்பெனி, பொன்மலை, திருச்சினாப்பள்ளி.

190333
T15 211,233
N34.1-8

# எமது தமிழ்ப் பிரசுரங்கள்

வி. எஸ். சிவசாம்ப ஐயர், பி. ஏ. எல். டி. இயற்றியவை.

### கலைமகள் வாசகங்கள்

வீ. வீரராகவன், எம். ஏ. இயற்றியவை.

| | | | |
|---|---|---|---|
| கலைமகள் வாசகம் முதல் வகுப்பு | 0 | 2 | 0 |
| இரண்டாம் வகுப்பு விலை அணா 3 | | | |
| மூன்றாம் வகுப்பு ,, 4 | | | |
| நான்காம் வகுப்பு ,, 5 | | | |
| ஐந்தாம் வகுப்பு ,, 6 | | | |

### கலைமகள் கதாவாசகம்

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் விலை ... | 0 | 2 | 0 |
| இரண்டாம் புத்தகம் விலை ... | 0 | 3 | 0 |

### கலைமகள் கணித நூல்

எஸ். தருமலிங்க நாயக்கர்.

| | | | |
|---|---|---|---|
| 1-வது புத்தகம் (1, 2, வகுப்பு) அணா | 0 | 5 | 0 |
| 2-வது புத்தகம் (3வது வகுப்பு) ,, | 0 | 6 | 0 |
| 3-வது புத்தகம் (4வது வகுப்பு) ,, | 0 | 8 | 0 |
| 4-வது புத்தகம் (5-வது வகுப்பு) ,, | 0 | 9 | 0 |

### நீதிக்கட்டுரைக் கோவை

வி. ஞானதிக்கம், பி. ஏ. எல். டி.

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் அணா ... | 0 | 4 | 0 |
| இரண்டாம் புத்தகம் ,, ... | 0 | 7 | 0 |
| கலைமகள் நீதிக்கதைகள் ,, ... | 0 | 4 | 0 |

### இந்துதேச சித்திர சரித்திர கதைகள்

டி. ஆர் ரங்கசாமி ஐயங்கார், எம். ஏ., எல் டி.

| | | | |
|---|---|---|---|
| முதற் புத்தகம் விலை அணா ... | 0 | 4 | 0 |
| இரண்டாம் புத்தகம் ,, ... | 0 | 5 | 0 |

எஸ். ஸ்ரீனிவாச அய்யர் அவர்கள், பி.ஏ.,எல். டி. எம். ஆர்.ஏ.எஸ்.

| | | | |
|---|---|---|---|
| வட ஆற்காடு பூகோளம் அணா ... | 0 | 4 | 0 |
| செங்கற்பட்டு பூகோளம் ,, ... | 0 | 5 | 0 |

### பாலர் கணிதம்

எம். எஸ். சுந்தரேஸ்வரன், எம். ஏ., எல். டி.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முதற் புத்தகம் விலை | 0 | 5 | 0 | இரண்டாம் புத்தகம் | 0 | 7 | 0 |
| மூன்றாம் புத்தகம் | 0 | 6 | 0 | நான்காம் புத்தகம் | 0 | 8 | 0 |
| ஐந்தாம் புத்தகம் | 9 | 0 | 0 | | | | |

எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி.
நெ. 2, சுகின் லேன் பீச்சு ஜார்ஜ் டவுன், மதறாஸ்.

# 35 வருடங்களாய்

உலகப் பிரசித்தி பெற்ற திரேக புஷ்டிக்கும் தாது புஷ்டிக்கும் சிறந்த டானிக்

## மதனமஞ்சரி




40 மாத்திரைகள் அடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1.

இம்மாத்திரைகள் அஜீர்ணம், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு நரம்பு தளர்ச்சி இவைகளை நாசமாக்கி திரேக புஷ்டியும் தாது புஷ்டியும் கொடுத்து

இல்லற வாழ்க்கையில் இன்பத்தையும் ஊக்கத்தையும், தரும்.

இனாம்! வைத்திய வித்தியா இனாம்!!

இப்புத்தகம் வேண்டுவோர் கடிதம் எழுதினால் தபால் செலவு இல்லாமல் அனுப்பப்படும்.

மதன மஞ்சரி பார்மஸி, 1-94 சைனா பஜார் ரோட், மதராஸ்.



## சுக வாழ்வு

நாம் நமது நாட்டில் சுகமாக வாழவிரும்பினால் வியாதிகள் என்னும் சத்ருக்களுக்கு இடங்கொடாமல் நமது தேகத்தைப் பார்த்துக்கொள்ளவேண்டும். நீங்கள் தேக அசதி, மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகமின்மை, மூத்திர சம்பந்தமான வியாதிகளால் கஷ்டப்பட்டால் உடனே,

## ஆதங்க நிக்ரஹக் மாத்திரைகளை

உபயோகியுங்கள். தேகத்தை வஜ்ர சரீரமாக்கி வைரக்கற் கோட்டையைப் போல் பாதுகாக்கும். 32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா. 1.

இனாம்! இனாம்!! இனாம்!!!

'இன்ப வாழ்க்கையிலடைந்த சக்தி'

உடனே விலாசத்தை தெரிவியுங்கள்

ஆதங்க நிக்ரஹக் ஔஷதாலயம்

26, பிராட்வே, மதராஸ்.



காலஞ்சென்ற ருவ் சாஹிப்

தி. ம. பொன்னுசாமி பிள்ளை அவர்கள்

இயற்றிய

## இனிய தமிழ் நாவல்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கமலாட்க்ஷி | .... | .... | 1 | 12 | 0 |
| விஜய சுந்தரம் | .... | .... | 2 | 0 | 0 |
| ஞான சம்பந்தம் | .... | .... | 1 | 4 | 0 |
| சிவ ஞானம் | .... | .... | 1 | 4 | 0 |
| ஞானப் பிரகாசம் | .... | .... | 1 | 12 | 0 |
| ஹரிச் சந்திரா (நாடகம்) | | .... | 0 | 1 | 0 |

ஆரம்பக் கல்வி புத்தகசாலை,

94-95, புதுத் தெரு, மண்ணடி மதராஸ்.

ரிஜிஸ்டர் நெ. 2912

# எமது இனிய தமிழ் பிரசுரங்கள்

[ஆக்கியோர்: மணி திருநாவுக்கரசு முதலியார்]

| | | | | |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | .... | 0 | 2 | 6 |
| இரண்டாம் ,, | .... | 0 | 3 | 0 |
| மூன்றாம் ,, | .... | 0 | 4 | 6 |
| நான்காம் ,, | .... | 0 | 5 | 6 |
| ஐந்தாம் ,, | .... | 0 | 6 | 6 |

## பொற்காலக் கணிதம்

[டி. எஸ். இராகவையர்]

| | | | | |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | .... | 0 | 5 | 0 |
| இரண்டாம் ,, | .... | 0 | 6 | 0 |
| மூன்றாம் ,, | .... | 0 | 8 | 0 |
| நான்காம் ,, | .... | 0 | 9 | 0 |

## இந்திய சரித்திர தீபம்

[சி. வி. நாராயண அய்யர், எம். ஏ., எல். டி.]

| | | | |
|---|---|---|---|
| 5-ஆம் வகுப்பு முதற் புத்தகம் | 0 | 5 | 0 |
| 6-ஆம் ,, இரண்டாம் புத்தகம் | 0 | 6 | 0 |

## சமூக வாசகம்

[ஆர். இராமையர், எம். ஏ. எல். டி.]

| | | | |
|---|---|---|---|
| 4-ம் வகுப்பு முதற் புத்தகம் | 0 | 4 | 0 |
| 5-ம் ,, இரண்டாம் புத்தகம் | 0 | 5 | 0 |

## நவீன சுகாதார வாசகங்கள்

[கே. இராஜம் அய்யங்கார், பி. ஏ., எல். டி., எம் ஐ எஸ். ஏ.]

| | | | |
|---|---|---|---|
| 4-ம் வகுப்பு இரண்டாம் புத்தகம் | 0 | 4 | 0 |
| 5-ம் வகுப்பு மூன்றாம் புத்தகம் | 0 | 5 | 0 |

## அறநெறி விளக்கம்

(மணி. திருநாவுக்கரசு முதலியார்)

| | | | |
|---|---|---|---|
| 4-ஆம் வகுப்பு முதற் புத்தகம் | 0 | 5 | 0 |
| 5-ம் ,, இரண்டாம் புத்தகம் | 0 | 6 | 0 |
| 6-ஆம் ,, மூன்றாம் புத்தகம் | 0 | 7 | 0 |

## ஒழுக்கத்தால் உயர்ந்தோர்

(மணி. திருஞானசம்மந்த முதலியார்)

| | | | |
|---|---|---|---|
| 4, 5-ஆம் வகுப்பு திருக்குறிப்புத் தொண்டர் | 0 | 7 | 0 |
| ,, அதிபத்த நாயனர் | 0 | 2 | 0 |
| ,, வருதிராத நாயனர் | 0 | 3 | 0 |
| ,, நந்தனர் | 0 | 5 | 0 |

கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி,
திருவல்லிக்கேணி, சென்னை.

பி. வீராகவன், அவர்களால், சென்னை மண்ணடி, புதுத் தெரு, நெ. 94-95 இல்லத்தில் "அசோஸியேஷன்", அச்சுக் கூடத்தில் அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.